# நாங்கள்



GUYS மாணவர் இளைஞர் பொதுமன்றம்

# சொல்கிறோம்

மலர் 5

05-07-85

கடந்த சில நாட்களாக நாடெங்கிலும் பரப்பப்பட்டு வரும் யுத்த நிறுத்தம் பற்றிய பேச்சுக்களின் உண்மையான பின்னணி என்ன? இச்சமயத்தில் இன்றுவரை தொடர்ந்து படுகொலை செய்து வந்த சிங்கள சோவானிஷ அரசின் கூலிப்படை இன்று நேசக் கரம் நீட்டி அணைக்க வருவதன் பின்னணி என்ன என்பதனையும் நாங்கள் அறிந்தும் பாராமுகமாக இருந்துவிட முடியாது.

தழும்புகளைத் தடவிப் பார்த்துக் கொண்டால் அவை வலிப் பதில்லை மாறாக தழும்பின் வரலாறுகளை நீங்கள் மறந்துவிட முடியாது. கற்பு பறிக்கப்பட்ட எத்தனையோ சகோதரிகளின் உள்ளத்துயர் இன்னும் ஆறவில்லை; பெற்றோரை இராணுவத்தின் வெறியாட்டத்திற்கு பலி கொடுத்து அனாதைகளாக வெறித்த விழிகளில் வற்றாது நீர் சிந்தும் சிறார்கள், எரிந்துபோன தம் வீட்டின் சாம்பல் மேடுகளில் இருந்து பெருமூச்சு விடும் மக்கள்; இராணுவ முகாம்களில் தொடர்ச்சியான சித்திரவதைக்குட்படும் தம் மைந்தர்களை நினைத்துருகும் அன்னையர்கள்; அகதிகளாக்கப் பட்டு அகதி முகாம்களில் போதிய உணவோ உறங்க இடமோ இன்றி தொற்றுயோடும் பசி, பட்டினியோடும் போராடும் ஆயிரக்கணக்கான எம்மக்கள்; இவை எல்லாவற்றையும் மறந்து ஈழவரின் உரிமைப் போராட்டத்தை நசுக்கி முடமாக்க நினைக்கும் கோமாளித்தனமான ஜே. ஆர். அரசின் கபடத்தனமான போர் நிறுத்த உடன்படிக்கை என்பது எமது பறிக்கப்பட்ட உரிமைகளை ஆட்சியாளர்கள் வழங்கப்போவதற்கு அறிகுறி என எமது மக்கள் நினைப்பின் அவர்களுக்காக நாம் பரிதாபப்படுகின்றோம்.

இந்த நிலையை உண்மையில் போர் நிறுத்தம் என மக்கள் கருதிக் கொண்டால் கிழக்கில் போராளிகளை அடக்குவதற்கு தீவிரபயிற்சியில் ஈடுபட்டபோது விமானத்திலிருந்து தவறிவிழுந்த கூலிப்பட்டாளத்தானது மரணமும் சிறிலங்கா அரசின் போர் ஒத்திகை பற்றிய செய்தியும், பிரித்தானியாவிலிருந்து வரப்போகும் பீரங்கிகள் இணைக்கப்பட்ட ரோந்து படகுகளும், பாதுகாப்பு அமைச்சரினதும், சிறிலங்கா இராணுவ ஆலோசகரினதும் அவ

சரமான தென் கொரியப் பயணத்தையும் எவ்வாறு போர் நிறுத்தம் எனக் கொள்ளமுடியும்.

கடந்த காலங்களில் தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைகளை அரசு தீர்க்க முனைந்ததாக கூறிக்கொண்டமையும்; இச்சமயங்களிலெல்லாம் தூண்டிவிடப்பட்ட மாற்றுக் கட்சியினர், பௌத்த மதகுருமார்கள் எதிர்ப்புகளை கிளப்பியதையும் பின்னர், நிகழ்த்தப்பட்ட உடன்படிக்கைகள் கிழித்தெறியப்பட்டமையும், வரலாறுக நம் முன்னே படைகப்பட்டுள்ளது. இவ்வரலாற்றின் படி முறையிலேயே அநுரா பண்டார நாயக்காவின் இன்றைய பேச்சான ''எந்த தீர்மானமும் தேர்தல் மூலம் மக்களின் அங்கீகாரம் பெறுமிடின் எதிர்த்தே தீருவோம்'' என்பதன் உள்ளர்த்தத்தினை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

சொந்த மண்ணின் துயர்துடைக்க ஆயுதம் ஏந்திப் போராடிய நூற்றுக்கணக்கான தோழர்கள் எமது பேபராட்டப் பாதையில் உயிர் நீத்தனர். இந்த கபடந்தனமான போர் நிறுத்தம் எங்கள் மக்களின் போராட்ட உணர்வை மழுங்கடித்து நெருக்கடி நிலையில் இருந்து விடுபட்டோம் என நினைக்க வைப்பின் தமது சுகதுக்கங்களை உதறி இளமையிலேயே இம் மண்ணிற்காக உயிர் நீத்த அப் போராளிகளில் உயிர்த் தியாயங்கள் அர்த்தமற்றவையாகிப் போய் விடாதோ கடந்த சில நாட்களில் சிறிலங்கா இராணுவம் யாழ் நகர பாடசாலைகள் விளையாட்டுக் கழகங்களுடன் கால்பந்தாட்ட நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்ய முயன்று வருகின்றது. சில அணிகள் கூட இவர்களின் கபடத்தனமான அழைப்பில் சோரம் போனமை வேதனைக்குரியது.

ஈழமண்ணில் வாழும் ஒவ்வொரு பிரஜையும் சிறிலங்கா அரசின் கபடத்தனமான போர்நிறுத்த உடன்படிக்கையின் உண்மை அர்த்தத்தை புரிந்துகொண்டு சகல கேளிக்கை, களியாட்டங்கள் பொழுதுபோக்குகள் போன்றவற்றை நிராகரித்து, இறுதியான உறுதியான, தீர்வான ஈழப்போராட்டத்திற்கு தயார் படுத்திக் கொள்ள ''நாங்கள்'' உங்களை அழைக்கிறது.

## போர் நிறுத்தம் போராட்ட முடிவல்ல

## "மலரப் போகும் ஈழம் பொருளாதார சுமையைத் தாங்குமா" (தொடர்ச்சி)

கடந்த இதழ்களில் ஈழப் பொருளாதாரம் பற்றிய ஆய்வுகளில் கடல் வளம், கனிவளம் பற்றி ஓரளவு ஆராய்ந்திருந்தோம் இவ்விதழில் பனைவளம் பற்றி ஆராய்ந்துள்ளோம். ஈழஎல்லைப் பகுதிகளில் பனை செறிந்து காணப்படுவது ஒரு சிறப்பம்சமாகும்.

**பனைவளம்:-**

ஈழ எல்லைகளில் காணப்படும் மூலவளங்களில் குறிப்பிடத்தக்களவு, திட்டமிடப்படாது பயன் பெறப்படும் வளமாக பனை காணப்படுகின்றது. தமிழ் பேசும் மக்களின் வாழ்க்கை யோட்டத்தில் அதாவது உணவு இருப்பிடம், பாவனைப்பொருட்கள் என்ற பல்வேறு அம்சங்களில் பனையும் அதன் மூலமான உற்பத்திப் பொருட்களும் பெரும் பங்கு வகித்து வருகின்றது. பனையுணவுப் பொருட்கள் அதிக சத்து நிறைந்தவையாகவும், உடலாரோக்கியத்துக்கு ஏற்றதாகவும் விளங்குகின்றது. ஆனல் பனை ஒரு தான் தோன்றித் தாவரம் என்ற வகையில் இதனைப் பேணுவது பற்றிய கவனம் மக்களிடம் காணப்படுவதில்லை. பெரும்பாலும் எவ்வகை மண்வளத்திலும் தானக வளர்ந்து பயனைக் கொடுக்கும் ஒரு தாவரமாக விளங்குகின்றது. பனையிலிருந்து பெறப்படும் பொருட்களான கிழங்கு, மரம், ஓலை, மட்டை, தும்பு, கருப்பணி, பழம், போன்றவற்றிலிருந்து பல்வேறு பொருட்கள் தயாரிக்கப்படுகின்றது.

மொத்தப் பரம்பலில் ஏறக்குறைய 67% யாழ் மாவட்டத்திலேயே காணப்படுகின்றது. மேலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏறக்குறைய 6,25,000 வடலிகள் வரையில் காணப்படுகின்றது. பனையின் பயன்பாடுகள் அதிகமாகக் காணப்படினும் இன்றுவரை எமது மக்களால் பயன்படுத்தப்பட்ட அளவு மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. மேலும் பனையின் மொத்தப் பரம்பலில் மிகக் குறைந்த அளவான மரங்களே உபயோகபடுத்தப்படுகின்றது. இன்றைய நிலையில் பனை வளத்தை முழுமையாக பயன்படுத்தக்கூடிய முயற்சிகள் துரிதமாக மேற்கொள்ளப்படுவது இன்றியமையாததாகும்.

சுமார் 60,650 ஏக்கர் நிலத்தில் ஏறக்குறைய 11 மில்லியன்

பனைகள் காணப்படுகின்றன. மாவட்ட ரீதியில் இது பின்வருமாறு அமைந்துள்ளது.

### அட்டவணை

| மாவட்டம் | ஏக்கர் | பனைமரங்களின் தொகை |
|---|---|---|
| யாழ்ப்பாணம் (கிளிநொச்சி உட்பட) | 40,000 | 7,345,800 |
| மன்னார் | 15 000 | 3,000,000 |
| முல்லைத்தீவு | 5,000 | 500,000 |
| திருகோணமலை | 250 | 50,000 |
| புத்தளம் | 250 | 50,000 |
| மட்டக்களப்பு | 50 | 50,000 |
| வவுனியா | 50 | 5,000 |
| அம்பாந்தோட்டை | 50 | 5,000 |
| | 60,650 | 11,005,800 |

1979ம் ஆண்டில் நிறுவப்பட்ட பனை அபிவிருத்திச் சபை இம்முயற்சிகளை ஓரளவு முன்னெடுத்துச் செயற்பட்டு வருகின்றது. சிலாகைகளைப் பெறும் வகையில் வருடாவருடம் ஒரு லட்சத்துக்கு மேலான பனை மரங்கள் வெட்டப்பட்டு வருகின்றது. இந்நிலை தொடருமாயின் எமது பனை வளத்தை முற்றாக இழக்க வேண்டிய தன்மை ஏற்படும் அபாயம் உள்ளது. பனை அபிவிருத்திச் சபையின் தோற்றத்துடன் பனையின் உபயோகம் பற்றிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அரசாங்கத்தின் பக்கசார்பான நடவடிக்கை காரணமாக நிதி ஒதுக்கீடு பற்றாக்குறையாக காணப்பட்டு வருகின்றது. உதாரணமாக மரபுரீதிய பனை உற்பத்திப் பொருட்களான ஒடியல், பனாட்டு, பதநீர், பனங்கட்டி, பனங்கற்கண்டு போன்ற உணவு பொருட்களில் இருந்து ஆராய்ச்சிகள் மூலம் பனம்பானம், பனங்கோடியல், பனம் சோஸ் (Sauce) ஜாம், சாறு (Crush) சீனி, சிறப் (Syrup) முதலிய உணவுப் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றது. இதே போன்று கைப்பணி பொருட்களாக மரபுரீதியாக உற்பத்தி செய்யப்பட்ட பாய், பெட்டி, கடகம், மூடல்கள் போன்றவற்றிலிருந்து இன்று நூற்றுக்கு மேலான பாவனைப்பொருட்கள், அலங்காரப் பொருட்கள் என்பன உற்பத்தி செய்யப்படுகின்றது.

இன்று இது சம்பந்தமான சிறியளவு பயிற்சி நிலையங்கள்



மட்டுமே காணப்படுகின்றது இத்துறை சார்ந்த ஆராய்ச்சிகள் மேலும் விரிவாக்கப்படின் வேலை வாய்ப்பினை அளிக்கக்கூடிய துறையாக இவ்வளம் சார்ந்த தொழிற்துறைகள் அமையும் என்பதில் சந்தேகமில்லை.

உள்நாட்டுத் தேவைப் பூர்த்தியுடன் மாத்திரம் நின்றுவிடாது அந்நியச் செலாவணியைப் பெற்றுத்தரும் நோக்கில் ஏற்றுமதி உற்பத்தியினை விஸ்தரிக்க முடியுமென பனை அபிவிருத்திச் சபை கூறியுள்ளது. உலகின் தும்புத் தேவைகளில் பனம் தும்புக்கு அதிக தேவை இருப்பதனால் தும்புக்கைத்தொழிலை கூடிய அளவு விரிவுபடுத்துதல் அவசியம். மேலும் பனையிலிருந்து பெறப்படும் "கள்ளு" உள்ளூர் பாவனை போக மீதமானவை வீணாக்கப்பட்டு வருகின்றது. இதனாலேயே இத்தொழில் சார்ந்த பல தொழிலாளர்களது வாழ்க்கைத்தரம் குறைந்ததாகவே காணப்படுகின்றது 18 தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனை சங்கங்களும், இவற்றின் அடிப்படையிலான ஊழியர் அமைப்பும் இயங்கிய போதும் காணப்பட்ட நிர்வாக ஊழல்கள், திறமையற்ற நிர்வாகம், போன்ற அம்சங்களினால் முற்றாக முறிவடைந்து மூடப்பட வேண்டிய துர்பாக்கிய நிலைக்கு இன்று தள்ளப்பட்டுள்ளது.

எனவே இந்நிலைமைகள் முற்றாக மாற்றப்படுதல் வேண்டும். எமது மண்ணின் மீட்சிக்காக போராடிவரும் "நாங்கள்" எமது வளத்தின் உபயோகம் பற்றி அறிந்திருத்தல் அவசியம் பனை சார்ந்த தொழில்கள் கிராமம் தோறும் அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டும். இதன் மூலமும் ஈழப்பிரதேசத்தில் பொருளாதார மேம்பாட்டினை அடையமுடியும்.

- தொடரும் -

## அட்டைப்பட விளக்கம்

இவர்கள் அந்நியன்
அடக்குமுறை விலங்குகளை
தகர்த்தவர்கள்
நாளைய ஈழத்தின்
வளத்தை
தோளில் சுமப்பவர்கள்
ஆனாலும்
சமுதாய சிறைக்குள்
இருந்து வெளிப்பட
இன்னமும் ஏனோ
மறந்து போயினர்?

# சீர்கெடுக்கும் தொலைக் காட்சி பற்றி ஒரு தொலை நோக்கு

### வித்தியாசமான விபச்சாரிகள்

இந்த மனிதர்கள்
மேலைத்தேய கன்னியர்
வெள்ளை தோல் உடலை
தம் வீடியோத்
திரைகளில்
உரித்துக் காட்டி
கட்டிளமைப் பருவத்திடம்
காசு கறக்கும்
வித்தியாசமான விபச்சாரிகள்
எதிர்கால குற்றவியல்
பரம்பரைக்கு
அங்கீகரிக்கப்படா
உயர்கல்வி மையங்கள்

சமதர்ம சமுதாயத்தின் உருவாக்கத்திற்காக உழைக்கும் எந்த ஒரு புரட்சி இயக்கமோ அல்லது ஒரு மாக்ஸிஸ் சிந்தனையாளனோ ஒரு பாட்டாளி வர்க்க புரட்சியென்பது மக்களை அரசியல் மயப் படுத்தி ஓர் அணிதிரட்டுவதன் மூலம் மாத்திரமே சாத்தியம் என்பதனை அறுதியிட்டு கூறுவர். அந்தவகையில் ஈழப்புரட்சியை முன்னெடுத்துச் செல்லும், செல்லமுயலும் முற்போக்குச் சக்திகள் இன்றைய மாணவர் மத்தியில் ஓர் அரசியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கான பிரச்சார நடவடிக்கைகளில் தீவிரமாக இறங்கியிருப்பது ஓர் முற்போக்கு நடவடிக்கை. புதிய புரட்சிகர சிந்தனைகளை புகுத்த முற்படும் புரட்சிகர சக்திகள் இற்றுப்போன இந்த தனியுடைமை சமுதாயத்தின் ஏற்றத் தாழ்வுகளை சுரண்டல் இயல்பினை நியாயப்படுத்த முயலும் அம்சங்களை இனங்கண்டு அவற்றின் பாதிப்பை முற்றாக தடுத்து நிறுத்தல் அல்லது நீர் மூலமாக்கல் நிச்சயமாக நிறைவேற்றப்படவேண்டிய ஒரு கடமை. இவ்வகையில் தொலைக்காட்சி (Televison – VEDIO) பாவனை அது தொடர்பான நிகழ்வுகள் அண்மைக் காலமாக எமதுமக்கள் மத்தியில் குறிப்பாக இளம் சந்ததியினரிடையே ஏற்படுத்தி வரும் சிந்தனை உளவியல் ரீதியிலான தாக்கங்கள் என்பனவற்றை



அவதானிக்கும் போது இதன் பாவனை எதிர்ப்புரட்சிக்கான சிந்தனைகரவை மக்கள் மனதில் உவுவாக்கக் கூடியதாக இருப்பதுடன் எமது மாணவர்களின் கல்விநாட்டத்தை குறைப்பதுடன் இளம் பிஞ்சுகளின் மனதில் வயதுக்குமீறிய சிலதவறான நடத்தைக்கான கூற்றும் ஓர் மனநிலையை ஏற்படுத்துகிறது.

சிறீலங்காவின் தேசிய தொலைக்காட்சி சேவையான ரூபவாஹினியின் உருவாக்கம் அதன் நோக்கங்களை அவதானிக்கும் போது இவ்வூடகம் முதலாளித்துவ ஊதுகுழல் என்ற அம்சத்தினை முக்கியமாகவும் பௌத்த சிங்களம் என்ற பேரினவாத இயல்பும் கொண்ட ஒலி, ஒளி நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம் பெரும்பான்மை மத்தியில் இனவாதத்தை ஊக்குவித்தலையும் ஈழவர் மீது ஏவிவிடப்படும் அளக்கு முறை நாசகார செயல்கள் பற்றிய உண்மைகளை வெளிவரவிடாதது அரசின் விருப்பத்திற்கேற்ப உருவாக்கப்படும் கதையளப்புகளை ஒலிபரப்பும் அமைப்பாகவுமே செயற்பட்டது. இதைத்தவிர வன்முறை, சதைக்கவர்ச்சி போன்றவற்றை ஊக்குவிக்கு நிகழ்ச்சிகளையுமே ஒளிபரப்பிவந்தது ஆனால் ஈழத்தின் பெரும்பாலான பகுதிகளில் கடந்த சில வருடகாலமாக ரூபவாஹினி தொலைக்காட்சி சேவையும் அதன் நிகழ்சி ஒலிபரப்பும் செல்வாக்கிழக்கத் தொடங்கியது. ஆனால் செல்வாக்கிழப்புக்கு காரணமான மக்கள் சிறீலங்கா அரசின் விஷமத்தனமான ஒலி, ஒளி நிகழ்ச்சிகளை வெறுத்து முழுமையாக பொழுது போக்கு களியாட்ட நிகழ்வுகளை தவிர்த்து போராட்டத்தில் முனைப்பாக இறங்கிவிட்டமையே என யாரும் அதீதமாக கற்பனை செய்யக் கூடாது உண்மையின் இம்மாற்றத்துக்கான காரணம் சிறிதுகாலத்திற்குமுன் ஈழம்வாழ் மேட்டுக்குடிப் பெருமக்களால் பாவனைக்கு கொண்டுவரப்பட்ட வீடியோ (VIDEO) ஒலி, ஒளி பரப்பு சாதனங்களின் அறிமுகமாகும்.

யப்பானியரின் தொழில் நுட்ப அறிவின் முதிர்வின் உருவான இவ் வீடியோ உபகரணங்கள் வெளிநாட்டில் தொழில் புரிவோர் மூலமும் சிறீலங்கா அரசின் தாராள இறக்குமதி கொள்கையின் விளைவாகவும் எம் மண்ணிற்குள்ளும் தாராளமாகவே வந்துவிட இதன் பாவனையானது முக்கியமாக நகர்ப்புறங்களில் குறிப்பாக உயர்தர, மத்தியதர வர்க்கங்களிடையே பெருமளவு செல்வாக்கு பெறலாயிற்று இதன் இன்றைய விளைவுகளை அவதானிக்கும் போது எமது மக்களின் நலன் விரும்பும் எந்த ஒரு சக்தியும் வேதனைபடாதிருக்க முடியாது.

எமது நகர்ப்புறங்களில் அளவுக்கதிகமாக தோன்றியிருக்கும் உள்ளூர் வீடியோ ஒலி - ஒளிபரப்பு சேவை (?) மையங்கள் மினி

வீடியோ அரங்குகள் எமது மக்களின் ஒரு பகுதியினரை ரோம் நகர் பற்றி எரிந்தபோது பிடில் வாசித்த நீரோக்களாக செயல்பட வழிகோலிற்று. அண்மைக் காலங்களில் ஈழத்தின் பெருமளவு கிராமங்கள் தீயிடப்பட்டு இளைஞர் தொடக்கம் முதியோர்வரை கொலைசெய்யப்பட்டு பெண்கள் மானபங்கப் படுத்தப்பட்டபோது எமது நகரப்பகுதிகளில் வாழும் பெருங்குடிப் பிறந்தோரில் பெரும் பகுதி நாள் முழுதும் தொலைக்காட்சி முன் அமர்ந்தி வீடியோ சாதன உதவியுடன் தென்னிந்திய திரைப்படங்களை (கலைப்படங்கள் சதைப்படங்கள் உட்பட) கண்டு களித்திருந்தனர். என்பது நாங்கள் அறிந்த கசப்பான உண்மை - 24 மணி நேரமும் ஈழத்தில் ஊரடங்கு அமுல் செய்யப்பட்டு சிறீலங்கா ராணுவம் அக்கிரம தர்ப்பார் நடத்திக் கொண்டிருந்தபோது எமது மக்களில் சிறு பகுதியினர் (?) தமது சுற்றுமதில் உலகங்களுக்குள் இருந்து கொண்டு வெளியே நடப்பதைப்பற்றி சிறிதும் கவலைப்படாது தொலைக்காட்சி வீடியோ சாதனங்களுடன கேளிக்கையாக பொழுது போக்கினர் என்பது வெளிப்படை - இச்சம்பவங்கள் தொலைக்காட்சியின் தீவிரமான சிந்தனை ஒடுக்கு முறை செயற்திறனுக்கு உதாரணமாகும்.

இக்கட்டந்தில் இச் சாதனங்கள், இவற்றின் பயன்பாடு எந்த அளவுக்கு மாணவரை இளம் சந்ததியினரை பாதிக்கிறது விளக்கமாக ஆராயப்படவேண்டியுள்ளது. தொலைக்காட்சி வைத்திருக்கும் குடும்பங்களில் உள்ள மாணவர்களும் அவர்களின் வீடுகளை அண்டி இருக்கும் மாணவர்களும் கூடியிருந்து பெருமளவு நேரத்தை தொலைக்காட்சிப் பெட்டிக்குமுன் செலவிடுகின்றதை பெரும்பாலான பகுதிகளில் அவதானிக்க முடியும் இச்சந்தர்ப்பங்களில் இங்கே உருவாகியிருக்கும் உள்ளூர் தொலைக்காட்சி அஞ்சல் நிலையங்கள் (Internal T. V. Transmissions) நாளாந்தம் 5–8 மணி நேரம் மூன்றும் தரமான திரைப்படங்களை ஒளிபரப்புகின்றன இதன் விளைவாக மாணவர்கள் கல்விகற்பதில் கவனம் செலுத்த வேண்டிய நேரம் குலைவடைந்து கல்வி வளர்ச்சி பாதிக்கபபடுகிறது. மெலும் வியாபார ரீதியில் பாலியல், றன்முறை காட்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து தயாரிக்கப்பட்ட திரைப்படங்களை தொடர்ந்தும் இவ்விளம் சந்ததியினர் பார்வையிடுவதனால் குற்றச் செயல்களில் ஈடுபடக்கூடிய மனநிலையை கொண்டவர்களாக வளர்ச்சியடைவர் இங்கிலாந்தில் தற்போது பாடசாலை சிறார்களிடம் இளம் சந்ததியினர் மத்தியில் தீவிரமாக வளர்ந்திருக்கும் பாலியல் குற்றச் செயல்களும் (Sex Crime) வன்முறை ஈடுபாடுகளுக்கும் இத்தகைய திரைப்படங்களின் செல்வாக்கே காரணம் என உளவியல் நிபுணர்கள் சுட்டிக் காட்டியிருப்பதை இச்சந்தர்ப்பத்தில் நாம் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.



யாழ்நகரப் புறங்களில் பெருமளவு உருவாகி இருக்கும் மினி வீடியோ அரங்குகள் அவற்றில் திரையிடப்படும் காட்சிகள் பற்றி ஆராய்ந்தபோது பல அதிர்ச்சி தரக்கூடிய செய்திகளை நாங்கள் தெரிந்து கொண்டோம். அநேகமாக பாடசாலைகளுக்கு அருகாமையில் உருவாகி இருக்கும் மினி அரங்குகளில் குறிப்பிட்டளவு மாணவர்கள் பாடசாலையை புறக்கணித்து திரைப்படம் பார்க்கிறார்கள்.

இவ்வரங்குகளில் ஐரோப்பிய நாடுகளில் தயாரிக்கப்பட்ட பாலியல் வக்கிரங்களை சித்தரிக்கும் (BLUE FILMS) இரகசிய ஏற்பாட்டின் பேரில் காட்டப்படுகின்றன. இவற்றில் முழுமையாக இளைய சந்ததியினரே கலந்து கொள்கின்றனர்.

மேலும் இந்த வீடியோ திரை அரங்குகளின் உரிமையாளர்கள் தமது வருமான அதிகரிப்புக்கான விளம்பர முறைகளை மேற்கொள்ளும் விதமானது வெறுக்கத்தக்க முறையிலே அமைந்துள்ளது. குறிப்பாக இவர்கள் இப்போது தென்னிந்திய திரைப்படங்களில் பார்க்க வன்முறை பாலியல் காட்சிகள் மிகுந்த ஆங்கிலப் படங்களையே திரையிடுகின்றனர் அவற்றிற்கான விளம்பரங்களில் இவ்வம்சங்களிற்கே முக்கியத்துவம் கொடுக்கின்றனர். இதனை இட்டு ஆழமாக ஆராய்ந்தால் குறிப்பாக மினி வீடியோ அரங்குகளும் உள்ளூர் தொலைக்காட்சி அஞ்சல் நிலையங்களும் எதிர்காலத்தில் ஓர் குற்றவியல் இயல்புள்ள ஒரு சந்ததியின் உருவாக்கத்திற்கும் மக்களின் சிந்தனை ஒடுக்குமுறைக்கும் பெரிதும் வழி சமைக்கப் போகின்றன.

இன்று தமிழ்பேசும் மக்களின் தட்டியெழுப்பட்ட போராட்டக் குணாம்சங்களை முடமாக்கும் முதலாளித்துவ வர்க்கத்து சாதனங்களாகவோ அன்றி அவற்றுக்கான முகவர்களின் வாரிசுகளாகவே இந்த மினி வீடியோ நிலையத்தார் விளங்குகின்றனர் தப்பியோடும் கூட்டத்தார். காட்டிக்கொடுக்கும் கயவர்கள், பேசா மடந்தையாகவும், உயிருள்ள பிணங்களாகவும் வாழ்பவர் மத்தியில் வாழும் எம்மவரின் எதிர்ப்புணர்ச்சிகள், சிந்தனைத் தெளிவுகள், தேசிய உணர்வுகள் அடியோடு வேரருக்க புறப்பட்டுள்ள இந்த புல்லுருவிகள் உடனடியாக நீக்கப்பட வேண்டும் அல்லது அவர்களாக நீங்குதல் வேண்டும்.

இதனையிட்டு புரட்சி இயக்கங்கள், புத்தி ஜீவிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோர் ஒன்றிணைந்து இதற்கெதிரான நடவடிக்கை எடுபபதற்கான எமது நிலையை பலப்படுத்தின் விரைவில் இப்பாதிப்புக்களை உடைத்தெறிவோம்.

# சமூக விரோதம்

வீதியோர விளக்கு கம்பத்தில்
தலை சாய்த்து
உயிர் துறந்த
ஏழ்மை வர்க்கத்து
உடல் இளைத்த சகோதரனே
உன் மரணப் பிரகடனம்
கேவலம்
ஓர் காகித அட்டையில்
அவர்கள் கிறுக்கி வைத்த
வார்த்தைகளில்
நீ...... ஒரு சமூக விரோதி
வறுமைத் துயரைப் போக்க
வர்க்கப் புரட்சி வளர்க்கும்
மார்க்ஸின் மைந்தர்களாம்
அவர்கள்
தான் வகுத்த வேதம்
குறைப் பிரசவத்தில்
ஜனித்தவர் கையில்
கறைபடக் கண்டு
கார்ல் மார்க்ஸ்
கல்லறையில் இருந்து
கண்ணீர் வடிக்கின்றான்
களத்தில் இருப்போரை
காட்டிக் கொடுக்கும்
கயமையை – நாங்கள்
கரங்களில் உள்ள
கருவியின் முனையால்
முற்றுப்புள்ளி வைப்பதை
ஏற்கிறோம் - ஆனால்
தன் வயிற்றுக் குழிவுகளை
நிரப்ப வழியறியாது
நகரத்து தரகு முதலைகளின்
மேடுகளில் மண்தேடும்
மனிதர்களில் செயல்கள்
தனியுடமை சமூகத்து
பொது உடமை
விஷவிருட்சத்தை வீழ்த்த
நினைத்த நீ



அதன் இலைகளையா
உதிர்த்துவது?
நாங்கள் சொல்கிறோம்
சாராயம் திருடிவிற்று
மக்கள் புனித வேள்விக்கு
நெய்வாங்கும் தோழர்களே
ஓர் கேள்வி
தன் மனைவியின்
சதை வற்றியமார்பு
மழலைக்காக பால் சுரக்க
மறந்த போது
பால்மா தகரங்களை
பதுக்கி விற்று பணம்தேடிய
நமது நகரத்து முதலைகள்
மடியில
தம் மழலை வயிற்றிற்கு
வழிதேடும் மனிதர்களும் -
தம் சொல்லுக்கும் செயலுக்கும்
தொடர்பறியாது
மனம் பேதலித்த
மனிதர்களும் கூட -
உங்கள் மன்றங்களின்
தீர்ப்பின்படி
மரணிக்க வேண்டும்
எனில்
எம்மக்கள்
கூட்டுறவு சாலைகளில்
கூடிவந்து
கொள்ளை கொண்டோரை
இன்று பலர்
தொழில் இழந்து
துயரம் கொள்ள
வழிவரைந்தோரை
போற்றுவதா?
இல்லை
அவர்கள் கூறுகிறார்கள்
நம்மூர்க் காக்கைகள்
எல்லாம்
குயிலின் குரலில்
கவிபாடும் காலம்
இது என்று

## கண்ணு மூச்சி - சிறுகதை

பேப்பர்க்காரன் பேப்பரை எறிந்துவிட்டு தனது சைகையை வெளிக்காட்டுவது போல் பெல்லை அடித்து விட்டுப்போகிறான். கந்தையா மாஸ்டர் அப்பொழுதுதான் பேப்பரைக் கையில் எடுத்துக் கொண்டு தனது கன்வஸ் கட்டிலில் சாய்ந்தார். ஒரே ஒரு முறை தான் தன் விழிகளை அந்தப் பேப்பரின்மீது மேய விட்டிருப்பார். அதற்கிடையில் அந்தப் பேப்பரை அப்படியே கிழித்தார்.

கந்தையா மாஸ்டர் பேப்பரை எடுத்ததையும் பார்த்து விட்டுக் கிழிப்பதையும் பார்த்தவாறு முத்தையா மாஸ்டர் வந்து, "என்ன மாஸ்டர் இப்பதான் எடுத்த நீங்கள் அதுக்குள்ளை குழந்தைப்பிள்ளை விளையாட்டு மாதிக் கிழிக்கிறியள், ஏன் என்ன சங்கதி" என்றவாறு பக்கத்துக் கதிரையில் அமர்ந்தார்.

"கிழிக்காமல் கொஞ்சட்டோ" கந்தையா மாஸ்டர் கொதிப்படைந்திருப்பதை காட்டும் பாவனையில் வந்தவார்த்தைகள் இது.

முத்தையா மாஸ்டருக்கு என்னவோ போலத்தான் இருந்தது என்றாலும் ஏன்மாஸ்டர் செய்தி ஏதோ பிழையாயிருக்கோ என்றபடி அவர் கிழித்தபத்திரிகைக்குக் கையை நீட்டினார்.

இதைப்பாருங்கோ மாஸ்டர் "போர் நிறுத்த உடன்படிக்கை நாளை கைச்சாத்திடப்படும், சமரசத்தீர்வுக்கு இருதரப்பினரும் இணக்கம்" இப்படி எழுதினால் எப்படிக் கிழிக்காமல் விடலாம்? என்றார் கந்தையர்.

ஹி.. ஹி... இது நல்ல முடிவு தானே மாஸ்டர். வீணாச் சனங்களைக் கொண்டுபோட்டுப் பெடியள் ஒழிச்சு விளையாடுறதிலும் பார்க்க இப்பிடி ஒருநல்ல சொலுசன் வருவது நல்லது தானே. எப்பபாத்தாலும் கவசவாகனங்களும் ஆயுதப்படையுமாக ரோட்டு ரோட்டாக ஆக்களைப் பிடிச்சுக் கொண்டுபோறதிலும் பார்க்க இனி எந்தநேரமும் நாங்கள் பயந்து கொண்டு அதாலை வாறானோ இதாலை வாறானோ என்று அங்கலாய்க்காமல் இப்பிடி ஒரு சபையை வைச்சு எங்கடை ஆக்களிட்டை எங்கடை ஆட்சியையும் ஒப்படைச்சிட்டால் எங்களுக்கு நல்லதுதானே. என்று முத்தையர் நீளப்பிரசங்கமே செய்து நிறுத்தினார்.



இந்தளவு பெடியளெல்லாம் சாகடிக்கப்பட்ட பிறகு இப்பிடி ஒரு முடிவா? ? ஆயிரக்கணக்கிலை வீடுவாசலெல்லாம் கொழுத்தி எங்கடைபள்ளிக் கூடங்கள் லைபிரரியள் எல்லாம் பம்பண்ணிப் பத்தாக் குறைக்குப் பாலங்களையும் உடைச்சு செய்யக் கூடிய அத்தனை அநியாயங்களையும் செய்த பிறகு... இப்பிடி ஒரு ஆட்சி தேவைதானா?

அர்த்தபுஸ்டியான கேள்விகளைச் சரமாரியாகத் தொடுத்து விட்டு எங்கோதன் வெறிச்சோடிய விழிகளை மேய விட்டார் கந்தையர்.

எப்பிடியும் ரோட்டுரோட்டாகச் சுட்டுத்தள்ளிப்போட்டு முகங் கருக்கிப் போட்டிட்டுபோறதிலும் இது நல்லதுதானே..... இனி அவங்கள் இராணுவத்தை எடுத்துப்போடுவங்கள் எங்கடை பிரச்சனையளும் தீர்ந்துவிடும் சும்மா பொடியள் "சிறு பிள்ளை வேளாண்மை விளைஞ்சும் வீடுவந்து சேராதெண்டு" முதியோர் சொன்னதும்..... இப்ப ஏற்பட்ட அந்த முடிவு நல்லது மாஸ்டர். இதை நீங்கள் வரவேற்கிறதைவிட்டிட்டு.......

என்ன மாஸ்டர் சொல்லுகிறியள் வரவேற்கிறதோ? நானோ அல்லது எங்கடை ஆக்களோ? கந்தையர் முத்தையரின் பதிலையே எதிர் பார்த்து நிறுத்தினார்.

ஏன் மாஸ்டர் எங்கடை ஆக்களுக்கு என்ன பிழைவரப் போகுது இது ஜனநாயகமுறைப்படி மிக நியாயமானது தானே ஜனநாயகத்தை வரவேற்கிறவை இந்தமுடிவுதானே சரியெண்டு சொல்லினம். முத்தையரின் வாதம் சரியான திசையில் நிலை கொண்டுவிட்டது.

ஓம் மாஸ்டர் ஜனநாயகம் தான். அடிக்கிறவனுக்கு ஆயுதங் குடுத்து அடிக்க, வெட்டச், சுடச்சம்பளமும் குடுத்துக் குடிஇருக்க வீடும் குடுக்கிற ஜனநாயக நாட்டிலை நீங்கள் சொல்றதும் சரிதான். அடிவாங்கிச்சாகிறவனுக்கோ அடிக்கிறவனுக்கோ ஆயுதம் குடுக்கவேணும்? உங்கடை ஜனநாயகத்திலை என்ன சொல்லுது...?

மாஸ்டர் மாஸ்டர் நீங்கள் பிழையாக விளங்குறியள். பெரும்பான்மை மக்களின் விருப்பம் தான் தான் மாஸ்டர் ஜனநாயகம். அதுக்கு இதைவிடப் பெடியள் காட்டிய சிவப்புச் சோஷலிசம் சரியெண்டு சொல்கிறியளோ?

சோஷலிசம் கிடக்கட்டும் மாஸ்டர். பெரும்பான்மை மக்களின் விருப்பம் ஜனநாயகமெண்டால் சிங்களவர்கள் இந்தநாடு

தங்கடைநாடாம். தமிழன் கள்ளத்தோணியாம். தென்னிந்தியாவிலை தானும் தமிழ்நாடு அங்கை தான் நாங்கள் ஈழம் அமைக்க வேணுமாம். இது தான் உங்கடை விருப்பமோ? இல்லையென்றால் சிங்களவரின் பெரும் பான்மையைவிட தமிழரின் பெரும் பான்மை அதாவது உலகத்தமிழர் ஆறுகோடி பேரும் ஈழம் அமைப்பது தான்சரி என்று சொல்லும் பெரும்பான்மை மக்களின் விருப்பத்தையா ஏற்பது? ஏன் மாஸ்டர் முழிக்கிறியள். பெடியள் சொல்லுகிற சிவப்புச் சோஷலிஷம் உங்களுக்குப் பிழையாகப்படுகுது. "ஆஹா என்றெழுந்தது பார் யுகப்புரட்சி," என்ற பாரதிபாடலைப் பல்லாயிரம் மேடைகளில் முழங்கித்தள்ளுறியளே அதுமட்டும் சரியாமோ?

என்ன மாஸ்டர் கதை விடுறியள். இந்த நாட்டின் மிகப் பெரிய ஜனநாயகவாதி, ஜனநாயகத்தின் காவலன் என்ன சொன்னார். "தமிழர் வாழ்ந்த பிரதேசம், பாரம்பரிய பிரதேசம் என்று எதுவும் கிடையாது." இப்பிடிச் சொன்னவர் இப்ப எந்த பாரம்பரியப் பிரதேசத்திற்கு மாஸ்டர் பிரதேச ஆட்சி மாகாண சபை குடுக்கிறார்? இது எந்த இனம் மாஸ்டர். பச்சை ரத்த இனமா? கந்தையர் கண்கள் சிவப்பேறக் கர்ச்சித்து விட்டு அப்பால் திரும்பினார்.

முத்தையர் பாவம் மூக்குடைபட்டவராக ஏதும் சொல்ல வார்த்தையின்றித் தடுமாறினார்.

இருவரது மௌனத்தையும் கலைப்பதுபோல சித்திராங்கி தேனீரோடுவந்து சேர்ந்தாள். என்ன முத்தையாமாமா – அரசியல் சர்ச்சை முத்திப்போச்சோ? சரிசரி சுடச்சுட ஒருகப் தேனீர் குடித்து விட்டுப் பேசுங்கோவன் என்று நிறுத்தினாள் சித்திராங்கி.

கந்தையரும் முத்தையரும் தேனீரை எடுத்துக் கொண்டனர். இருவரும் எதையும் பேசத்தயங்குவது போன்ற ஒரு நிலையில் இருப்பதைப் புரிந்து கொண்ட சித்திராங்கி மெல்லப் பேசினாள்.

மாமா இந்த நாட்டிலை 90வீதமானவாகள் உழைக்கும் மக்கள் ஆனால் இந்தத் 90 வீதவான மக்களை 10 வீதமானவர்கள் தானே ஆள்கிறார்கள். மிகப் பெரும்பான்மையான மக்களை மிகச் சிறுபான்மையானவர்கள் ஆள்வதைத்தான் இவர்கள் ஜனநாயகம் என்று பிதற்றி நம்மை ஏமாற்றுகிறார்கள். உண்மையாகவே இந்த 90 வீதமான உழைக்கும் வர்க்கத்தினர் இந்தநாட்டை ஆள்வது தான் மிகச்சரியான ஜனநாயகம். அந்த ஜனநாயகத்தை



தான் நாங்கள் சோஷலிஷம் என்றும், சோஷலிச ஜனநாயகமென்றும் சொல்கிறோம். இது எப்படிப் பிழையாக இருக்க முடியும் என்றாள் சித்திராங்கி.

எதையோ விளங்கத்துடிப்பது போல் முத்தையா சிரித்துக் கொண்டார்.

"ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை மாந்தரில்" என்ற பாரதியின் கனவும், "எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்" என்ற கவிஞரின் பாடல்களை ஆழமாகக் கொண்டது தான் இந்த சோஷலிசம். இது பிழையான பாதை என்றால் அப்பா டொக்டருக்கும் எஞ்சினியருக்கும், படிக்கவிட்ட எங்கடை அண்ணரவையை இந்த இயக்கத்திலை விட்டிட்டு நெஞ்சைநிமிர்த்திக் கொண்டு திரிவரெண்டா நினைச்சியள் என்று முத்தையரை வென்றெடுத்து விட்டபாவனையில் தன் பேச்சை நிறுத்தினாள் சித்திராங்கி.

ஹி... ஹி... பிள்ளை சித்திராங்கி கெட்டிக்காரிதான் அப்பா சொல்லுகிறதிலும் பார்க்க நீ சொல்றது விளங்கமாயிருக்குச் சித்திரா. மாஸ்டர் இப்ப சொல்றன் நீங்கள் பேப்பரைக் கிழித்தது சரிதான். முகமெல்லாம் பல்லாக முத்தையர் சொகுசாகச் சிரித்தார்.


ம்... அப்பிடியோ மாஸ்டர் இதென்ன வேளாண்மையோ? என்று விட்டுகொல் எனச்சிரித்தார்.

முத்தையரும் தன் அசட்டுத்தனத்தை மேலும் காட்டிக்கொள்ளாது கந்தையரோடு சேர்ந்து கொண்டார்.

சித்திராங்கி உள்ளே சென்றதும் முத்தையர் கந்தையரைச் சீண்டுமாப்போல் "மெய்யே மாஸ்டர் அப்ப உந்த ஒப்பந்தங்கள் சரிவராதெண்டு சொல்லுறியளோ? "என்றார் மெதுவாக.

என்ன குழந்தைப் பிள்ளைக் கேள்வி மாஸ்டர். பண்டாரநாயக்கா செல்வநாயகம் ஒப்பந்தத்திலை துவங்கின கண்ணாமூச்சி விளையாட்டு எத்தனையோ ஒப்பந்தங்களைக்கண்டு கடைசியிலை ஒப்பந்தங்களே வெளியிலை பந்தம் பிடிக்கவைச்சிருக்கு. உங்களுக்குள்ளை சரியாகாத பந்தங்கள் வெளியிலைசரிவருமோ? வெளியிலை சரிவந்தால் உள்ளுக்கிருப்பவை விடுவினமோ? இது "கண்டெலிக்குச் சீவன் போறநிலை பூனைக்கு விளையாட்டு" என்ற நிலைதான்.

(24-ம் பக்கம் பார்க்க)





# காதலிக்கு ஓர் தொடர் கடிதம்

எங்கோ வெகு தொலைவில்
இருந்து என்னை நிதம் நினைத்து
நெஞ்சமது புண்ணாக நினைவிழந்து
வஞ்சகரால் வருதுயரில் நான் வீழ்ந்து
துடித்துக் கதறுவேனோ...
துயர் பட்டலறுவனோ என்றெண்ணி...
உதிரத்தைப் பாலாக்கி ஈந்தவளின் விழிகளிப்போ
இரத்தக் கண்ணீர் வடித்து இருளாகும் நிலையென்று
நெஞ்சுருக நீர் வடித்துன் துயரனைத்தும் ஒன்றாக்கி
கண்ணே நீ வடித்தெடுத்து வரைந்த மடல்
கையில் கிடைத்ததுதான் என்றாலும்...
வீட்டிற்கு இப்போது வருமெண்ணம் சிறிதேனும்
நாட்டத்திற்கூட இல்லையடி என் அன்பே...
அன்று
பொங்கலுக்காய் பட்டாசு
வாங்கிச் சுடுகையிலுன் கையிரண்டும்
செவி பொத்த வாய் பிதற்றி ஐயோ அத்தான்
தூரத்தே கொண்டிந்தப் பட்டாசை
கொழுத்தி முடித்து விட்டு வாருங்கள் என்று
சொன்னதையும் இன்றிந்தப் பரப்பிலெங்கும்
படபடக்கும் துப்பாக்கி வேட்டொலிக்கும்
குண்டொலியும் கேட்டு கேட்டு
சலித்ததனால் சற்றுமதைச் சட்டை செய்யாது
ஒதுங்கிப் பயணம் அதை தொடருவதை எல்லாம்
மறந்துவிட்டா மடல் வரைந்தாய் அன்பே!
எங்கும் வெடிக்கின்ற இதயங்கள் தம் துயரே
என் செவியில் ஒலிக்கையிலே
வீட்டிற்கு வந்து எதிரிதன் விருந்தாகிடவோ
ஆதிக்க வெறியர்களால் எழுமிந்த அவலங்கள்
தமை யெண்ணித்தாலாட்டுப் பேய் முகாரி
பாடிடவா...?
முத்துச்சுடர் போலு முன்விழிகள்
விண்ணாகி இப்போ கண்ணீர் மழைபொழியும்
கண்ணே உன் கண்ணீர்காய்
நான் வருதல் முறையன்று......
நம்நாட்டு மக்களெல்லாம்
ஆதிக்கத் தீயதனால் அல்லற்பட்டலறுவதும்

நீதிக்கே நாதியற்று நடுத்தெருவில்
சந்தி தெரு வீதி சத்திரங்கள் சாவடியில்
குந்தி இருந்தே சன்னப் பரிசுகளால் சவமாய் கிடக்கையிலே
மாடி மனை வீடுகளும் படியறியாக் குடிசைகளும்
அக்கணமே சாம்பல் மேடுகளாய் மாறுவதும்
ஆற்றங்கரை தனினும் அதையடுத்த வெளிகளிலும்
ஆழக் குழிதோண்டி அதில் பிணங்கள் குவிப்பதுவும்
பாதி உயிரோடு பதைபதைக்க கொழுத்துவதும்
வாடிக்கையானதொரு வரலாறுய் போனதனுல்
நாம் தானிந்த நரபலியை நிறுத்திவைக்கும்
புதிய வரலாற்றைப் படைத்துவிட வேண்டுமடி
அதுவரையும் என் அன்பே நம்பிரிவை
காவியமாய்த் தீட்டி என் கடமை தனை மாற்றுதே
பாயிரமாய் வாழ்ந்த பரப்பெல்லாம் இப்போது
காவியங்கள் தோன்றும் களமாகப் போகையிலே
வா அத்தானென்றென்னை ஏனழைக்க நீ முனைந்தாய்
எத்திசையும் பிணவாடை நெடில் வீசவைக்கும்
கூட்டத்தின் மத்தியிலுன்னேடு
நான் சேர்ந்து வாழ்வது ஒரு வாழ்வா!
பெற்றவள் புலம்பி வீழ உற்றதோர் மனைவி மக்களெல்லாம்
விதவைகள் கூட்டமாய் நாம் வாழ்வது முறையோ
சந்ததி இல்லா நாட்டில் சரித்திரம் நிலைப்பதாமே
குந்தக மண்ணேடு குடும்பத்தலைவர்களெல்லாம் சென்றுல்
குலமானம் பேண இங்கு குடிகளே இருக்கமாட்டார்
விலைமாதர் நாடாய் போடும் வேலியில் பயிராய் நாமும்
நிலையினை இழந்து நாட்டில் நிறுத்திட ஏதுமுண்டோ
விலையில்லா வீரமெங்கள் இளைஞர் தம் வலுவே போதும்
விரைந்திங்கு வருவீரத்தான் விம்மலைத் தணிப்பீரென்று
விளம்பிய தெல்லாம் நன்றுய் படித்து நான் அறிந்தேனுண்மை
இளைஞர்க்கும் தாய் சேய் உண்டு தங்கையர் தோழி உண்டு
மழலையுமுண்டு மண்ணில் ஆடவர் தமக்கெல்லாம்
அரியதோருறவிலெல்லாம் இணைபவள் பெண்ணே யென்றுல்
பெண்ணற்ற ஆணை இங்கே பெற்றிட வழியேயில்லை
இப்படி யொதுங்கி நாமும் நம்வழியிருந்தாலிந்த
இடர்களை வெல்வாரென்று எவருமே இருக்காரிங்கு
ஆதிக்க வெறியே மிஞ்சும் அடிமையாமிருளில் இம்மோர்
சிக்கியே தவிக்கும் மண்ணில் மானுட்டம் தழைக்குமாமோ

- தொடரும் மறு கடிதத்தில் -



## புறப்படு அண்ணு......

அண்ணு!
வீறுகொண்டு எழுவதற்கு
வெற்றிநடை போடுவதற்கு
இன்னமும் ஏன் தயக்கம்?
எதிரிகளை அழித்திட
ஈழவரைக் காத்திட
இளையவன் என்னுடன்
மூத்தவன் நீ இணைய
ஏன் இந்த மயக்கம்?
அன்று உன் காதலி
சிங்களக் காடையரால்...
ஓ!
கிழக்கை நோக்கி
கதிரவன் புறப்பட்டுவிட்டான்!
புரட்சிப் பாதையை நோக்கி
புறப்படுவோம் நாமும்!
எம் இருவர் கைகளும்
இணைந்தெழுப்பும் அந்த ஒலியில்
விழித்தெழட்டும்
ஈழவர் சமுதாயம்!
ம்!
புறப்படு அண்ணு! புறப்படு!!

## அட என் மகனே......

''அட என் மகனே
அபுதாபிக்கு பாஸ்போட்டை
அவசரமாய் எடடா' என்று
பல்லவி பாடும் என்
அன்பான அப்பாவே!
இனவெறித் தடியரால்
நம் உடன்பிறவாச் சகோதரிகளின்
நகங்களெல்லாம் சாயமின்றியே,
நாளாந்தம் சிவக்கின்றன!
அதிகார வெறியரின்
அட்டகாச எரியூட்டுக்கு
தியாகப்பூக்கள் சில கருகினுலும்
இலட்சியப் பூங்கன்று
வெட்டவெட்டத் தழைத்திடும்!?
ஆகையினுல் என்
அபுதாபி அப்பாவே
அபுதாபிக்கென்ன,
அம்புலிக்கே அழைத்தாலும்
சுதந்திர ஈழம் காணும்வரை
சொர்க்கத்துக்கேனும் வரமாட்டேன்!!!''

மாணவர்கள் மத்தியில் அரசியல் சிந்தனையை மேலோங்கச் செய்வதற்காகவே "நாங்கள்" தனது வெளியீட்டில் மாணவர்களின் படைப்புகளை வெளியிட்டு வருகின்றது. இந்த வரிசையிலே 9-ம் தரத்தைச் சார்ந்த மாணவனின் சுயமான ஆய்வு ஒன்றினை இங்கு வெளியிட்டுள்ளோம். இவ்வாறு தொடர்ச்சியான சிந்தனைகள் மூலம் ஈழம், ஈழஎல்லைகள், வரலாறுகள் என்பன மயக்கமின்றி வளர்ச்சியடையும் என "நாங்கள்" எதிர்பார்க்கின்றது. தொடர்ச்சியான இவ்வகை ஆய்வுகள் வரவேற்கப்படும்.

# கல்வியில் புகுத்தப்படும் பேரினவாதம்

தமிழ் பேசும் மாணவர்கள் மத்தியில் இன உணர்வை மழுங்கடித்து ஸ்ரீ லங்கா சிங்கள மக்களுக்கான நாடு என்றொரு மாயை நிலையினை உருவாக்கும் வகையிலும் மனோரீதியாக இத்தாக்கத்தை சிறுர்கள் மத்தியில் அவர்கள் அறியாமலே புகுத்தும் வகையிலும் ஸ்ரீ லங்கா அரசு திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றது. இந்த அடிப்படையிலேயே பாடநூல்களில் முழுச் சிங்களத் திணிப்பு பௌத்த சிங்கள வரலாறுகள் முதலியவற்றைப் புகுத்துவதன் மூலம் தமிழ்பேசும் மாணவர்களின் அறிவினை மழுங்கடித்து திசை திருப்ப அரசு முயன்று வருகின்றது. இதனை விளக்குவதாயின் ஆங்கிலம், சமூகக்கல்வி, சித்திரம் போன்ற பாடங்களின் மூலம் திணிக்கப்படுவதனை காணலாம். இந்த அறிவு மழுங்கடிக்கும் நிகழ்ச்சியை இன்னும் பல மாணவர்கள் உணராமல் இருக்கிறுர்கள். இதனை சுட்டிக்காட்டுவது தற்போது பொருத்தமானதாகும்.

இதுபற்றிய ஆய்விலே எட்டாம் வகுப்புத் தொடக்கம் பத்தாம் வகுப்புவரை உள்ள பாடநூல்களை எடுத்து நோக்குவோம்.

எட்டாம் வகுப்பு ஆங்கில பாடநூலினை எடுத்து நோக்கின் இங்கு LESSON UNIT ONE தொடக்கம் TEN வரையிலான LANGUAGE PRACTICE இல் பாவிக்கப்படும் பெயர்கள் 7 : 3 என்ற விகிதத்திலே சிங்கள தமிழ் பெயர்கள் காணப்படுகின்றன உதாரணமாக GUNADASA, PATHIRANA, GAMINI, SENA SILVA, UPALI, SARATH போன்றன இங்கு பாவிக்கப்படும் சிங்களப் பெயர்களாகும்

அடுத்து பாடநூல்களில் வரையப்படும் சித்திரங்கள் சிங்கள மக்களின் நடை, உடை, பாவனை, பண்பாடு, கலாச்சாரம் என்



பவற்றை பிரதிபலிப்பதாக உள்ளது. இதனால் சிங்கள மாணவர் மத்தியிலே இது தனிச் சிங்கள நாடு என்ற இனத்துவேஷத்தையும், தமிழ்பேசும் மாணவர் மத்தியில் அவர்கள் இலங்கையிலின்று அந்நியப்பட்டவர்கள் என்ற உணர்வையும் தோற்றுவிப்பதாக உள்ளது.

இங்கு கூறப்படும் கதைகள், சம்பவங்கள் அனைத்தும் சிங்கள மக்களின் சமுதாய வாழ்வு முறைகளை கொண்டு பின்னப்பட்டதாகவே இருக்கிறது. உதாரணமாக Seeya என்னும் படத்திலே இதனைத் தெளிவாகக் காணலாம். மேலும் இங்கு ஒருசில இடங்களில் தனிச் சிங்களச் சொற்கள் ஆங்கில வடிவம் பெறுவதனைக் காணலாம். உதாரணமாக LEESSON UNIT ONE இல் LANGUAGE PRACTICE இல் புகையிரதத்தின் பெயர் பாவிக்கும் இடத்தில் UDARATTA MENIKE என்பதனை உபயோகித்துள்ளனர். மற்றும் IN A WATCH-HUT எனும் பாடத்திலே 'PEL KAVIA' என்னும் சிங்களச் சொல் பாவிக்கப்படுகிறது. 'PEL K A V I A' என்ருல் தேவாரம் அல்லது கடவுள் மீது பாடப்படும் பாடல் என்று பொருள். SEEYA என்னும் மற்றொரு சிங்களச் சொல் இங்கு கூறப்பட்டிருக்கின்றது. இதற்கு பேரன் என்று தமிழில் பொருள்படும்.

மற்றும் சில இடங்களிலே ஊர்களின், கிராமங்களின் பெயர்கள் சிங்களப் பெயர்களாகவே பாவிக்கப்படுகின்றன. Thalakena Dambulla, Rangalla, என்பவற்றை உதாரணமாகக் கூறலாம். இதேபோலவே 9 ம் 10-ம் தரங்களிலுமுள்ள ஆங்கில பாடநூல்களில் இடம் பெறுகின்றன.

அடுத்து சமூகக்கல்வி பாடநூலே எடுத்துப்பார்ப்போம். இங்கு எட்டாம் வகுப்பு சமூகக்கல்வி பாடநூலிலே 9-ம் அத்தியாயத்திலே இடம் பெற்ற 'இலங்கையின் இற்றைக்கால அபிவிருத்தித் திட்டங்கள்' எனும் தலைப்பிலான பாடத்தில் மலைநாட்டில் தேயிலை உற்பத்தி பற்றிக் குறிப்பிடுகையிலே, அங்கு வாழும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வு வளம்மிக்கதாக அமைந்துள்ளதென குறிப்பிடப்பட்டுள்ளது. இது அப்பட்டமான பொய்யாகும். அதனை விட, வடக்கு கிழக்கு, அபிவிருத்தித்திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இனி 9-ம் தர சமூகக்கல்வி நூலை எடுத்துக்கொண்டால் 11ம் அத்தியாயத்திலே 'இலங்கையின் அபிவிருத்தி-வரலாற்றுப் பின்

ணி' என்பதில் ஆதிகால இலங்கையில் பௌத்த மதமே காணப்பட்டது என்றும், அக்காலத்தில் சைவமோ, இஸ்லாமோ, இலங்கையின் எப்பகுதியிலும் இருக்கவில்லை. என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. சைவம் என்பது இலங்கையின் அறப்பழைய காலந்தொட்டே இருந்திருக்கிறதென்பதற்கு பல சான்றுகள் ஆராய்ச்சியாளர்களால் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இங்கு வரலாறு திசை திருப்பப்படுவதனை நாம் கவனிக்கவேண்டும்.

இதே அத்தியாயத்திலே கி.மு. 6-ம் நூற்றாண்டில் இலங்கையில் நிகழ்ந்த ஆரியக் குடியிருப்புகள் வட இந்தியாவில் இருந்தே நடைபெற்றதெனவும், அங்கிருந்து குடியேறிய ஆரியர்களே இன்றைய சிங்களவர்கள் என்றும், அவர்களே இலங்கையின் ஆதிக்குடிகள் என்றும், பின்னர் வியாபாரநோக்கத்திற்காக இங்கு வந்தவர் தென் இந்தியத் திராவிடர்கள் என்றும், அவர்களே இன்றைய தமிழ் பேசும் மக்கள் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இதில் முதலாவதாக கூறப்பட்ட வட இந்திய ஆரியர்கள் (அதாவது விஜயனின் விஜயம்) இங்கு வருமுன்னரே தமிழ் பேசும் மக்கள் இலங்கையிலே இருந்தார்கள். விஜயனின் வழித்தோன்றல்களே இன்றைய சிங்களவர்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. விஜயன் 'குவேனி' என்னும் நாகர் இன அரசியை மணமுடித்து இலங்கைக்கு அதிபதியாகிய பின்னர், அவளை கொன்றுவிட்டு பாண்டிய இளவரசி ஒருத்தியை மணம் செய்தான் என மகாவம்சம் கூறுகிறது. மகாவம்சத்தை அடிப்படையாகக் கொண்டு கூறப்படுகின்ற பல நிகழ்ச்சிகள் இலங்கையின் உண்மையான வரலாறுகள் அல்ல. பதிலுக்கு உண்மையான வரலாறுகளை ஆய்வு செய்து உண்மை வரலாற்றை அடிப்படையாக வைத்தே நூல்கள் எழுதப்படவேண்டும். ஆனால் இங்கு மாறாக உண்மை வரலாறுகள் பல திரிபுபடுத்தப்பட்டிருப்பதனைக் காணலாம்.

“தென் இந்தியப் படை எடுப்புகள்” எனும் அத்தியாயத்திலே அநுராதபுரத்தை ஆண்ட அசேலனைப் புறமுதுகிட்டு ஓடச்செய்த தமிழ் மன்னனான எல்லாளன் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. எல்லாளன் சொற்ப காலமே இலங்கையை ஆண்டான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் எல்லாளன் 44 வருடங்கள் ஆட்சி செய்தான். இங்கு துட்டகைமுனுவின் வாழ்க்கை பற்றி கூறப்படுமிடத்து அவன் வாழ்வில் நடந்த முக்கிய சம்பவமான சிறியவனான துட்டகைமுனு ஒருநாள் முடங்கிப் படுத்துறங்கையில்: ஏன் அவ்வாறு படுத்திருக்கிறாய் என அவன் அன்னைவினவ



வடக்கில் தமிழன் ஆட்சி நடக்கிறது தெற்கிலே கடல் நான் எவ்வாறு நீட்டி நிமிர்ந்து நிம்மதியாகப் படுப்பது என்றான் இது மறைக்கப்பட்டுவிட்டது.

இதே அத்தியாயத்திலே கி.பி. 1070 இல் சோழப் பேரரசினால் உண்டான போரிலே 53 ஆண்டுகாலம் பௌத்த மதம் வீழ்ச்சி அடைந்தது. இக்கால கட்டத்திலேயே சோழர்களினால் இந்துமதம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டதென்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்துமதத்தின் உண்மையான வருகை பற்றி முன்னர் தரப்பட்டிருக்கிறது.

இந்துமதத்தின் வருகைப்பற்றி வேறு ஒரு இடத்திலே பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. [பாடம் “நிசங்கமல்லன்”] கி.பி. 13 இல் கலிங்க நாட்டு கொடுங்கோலனான மாகன் இராசரட்டையைத் தாக்கி ஆட்சியைக் கைப்பற்றினான். இங்கு உண்மையான வரலாறு காணப்பட முன்னைய அரசர் கடைப்பிடித்த பூட்கைக்கு எதிர்மாறான ஒரு பூட்கையை கடைபிடித்தான் என்றும், விகாரைகளை தாக்கி பிக்குகளை ஏளனம் செய்து தனக்கு மாறான சிங்களவரைத் தாக்கினான் எனவும் அவனால் இங்கு இந்து மதம் மேலேங்கியது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது உண்மை நிகழ்ச்சியல்ல. இப்படியான சம்பவங்களைக் கூறுவதால் சிங்கள மாணவர் மத்தியில் இனவெறி ஊட்டப்படுகிறது. இவ்வாறு செய்வதால் அவர்களை தமிழ் பேசும் மக்களுக்கு எதிரானவர்களாக அரசு மாற்ற முயல்கிறது எனக் கருத இடமுண்டு.

அடுத்து சித்திரப் பாடத்தினை நோக்குவோம். இங்கு ஆறாம் தரத்தில் பாடத்தினை ஆரம்பிக்கையிலே பௌத்தர்களின் புனிதச் சின்னமான தாது கோபுரம் முதலில் வரையக் கற்பிக்கப்படுகின்றது. 6-ம் தரம் தொடங்கி 10-ம் தரம் வரை பாடசாலைகளில் கற்பிக்கப்படும் மதிப்பீட்டுப் பாடங்களில் முக்கியமாக இடம் பெற்றிருப்பது சிங்கள மக்களின் கலையே. இதனால் சிங்கள மக்களின் கலை முதன்மைப்படுத்தப்படுகிறது.

உதாரணமாக தாது கோபுர அமைப்புமுறை, புத்தரின் சமாதிநிலை, இலங்க திலக்க விகாரை, இசுருமுனிய, கண்டிய நடனம் என்பவையே கற்பிக்கப்படுகிறது.

அடுத்து 'இலங்கையின் கலைப்படைப்புகள்' என்பதில் தாது கோபுரங்கள், புத்தர் சிலைகள் (இதில் நிலையற்ற, அமர்ந்த, கிடையான,) போதிச்சத்வர் உருவங்கள், மாயாதேவியின் கனவுகள்

சந்திரவடிவக் கற்கள், இசுருமுனிய என்பனவே கற்பிக்கப்படுகின்றன. இங்குள்ள வரலாற்றுச் சிறப்புமிகு கோயில்களின் சிறப்புகளோ கோபுரங்களின் தனித்தன்மையோ, சிற்பங்களின் அமைப்புமுறை பற்றியோ கற்பிக்கப்படுவதில்லை. இங்கு தமிழ்பேசும் மக்களின் கலாச்சாரம் புறக்கணிக்கப்படுவதினைக் காணலாம். சனத்தொகை அடிப்படையில் கூடுதலான அளவு சிங்கள மக்களின் கலாச்சாரம் பற்றிக் கபிற்கப்பட்டாலும், தமிழ் பேசும் மக்களின் தொகை அளவிற்குக் கூட அவர்களின் கலாச்சாரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை.

இவ்வாறு பல்வேறு வழிகளிலும் இலங்கை சிங்கள பௌத்த மக்களது என்ற உணர்வினை வளர்க்கச் செய்யும் அதேசமயம் தமிழ் மாணவர்கள் மத்தியில் சிங்கள மக்களுக்கே இலங்கை உரிமையானது என்ற கீழ்நில மனோபாவத்தை அரசானது ஊட்டுகின்றது. என்றே நாம கருத முடியும். எனவே சரியான அடிப்படையில் பாடத்திட்டங்கள் வகுக்கப்பட வேண்டுமானால் அது எப்போது சாத்தியமாகும் என்பதனை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

---

**கண்ணு மூச்சி . . .**

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்பப் பூனைக்கு மணிகட்டுகிறது ஆரெண்டு கேக்கிறியள்? என்று விளங்கிக் கொண்டபாவனையில் கேட்டார் முத்தையர்.

ம்... மாஸ்டர்... நீங்கள் இப்பதான் சரியான வழிக்கு வந்திருக்கிறியள் பூனைக்கு மணிகட்டியே தீரவேண்டும். எட்டுத்திசையிலும் ஒண்டொண்டா நிக்காமல் எல்லோரும் ஒண்டாகவேணும் அப்புறமென்ன மணி மட்டுமே கட்டலாம்...... என்னென்னவோ எல்லாம் கட்டலாம் என்ற கந்தையரின் வார்த்தையோடு முத்தையரும் சேர்ந்ததுபோல் தலையை அசைத்துக் கொண்டார்.



சென்ற இதழில் "மழலையரின் மனதுகளில் மறைந்து கிடப்பவை என்ற தலைப்பின் கீழ் வெளியிடப்பட்ட கேள்வி - பதில் பகுதி பற்றிய தொரு விமர்சனத்தை மாற்றமெதுவும் செய்யாது தந்துள்ளோம் விமர்சனங்களை வரவேற்கின்றோம்.

உங்களால் கேட்கப்பட்ட "மாணவர்கள் இயக்கங்களுடன் தொடர்பு கொண்டிருத்தலை நீர் விரும்புகின்றீரா? அவர்களுக்கு பயிற்சி அளிப்பதை விரும்புகின்றீரா? என்ற கேள்விக்கு அளிக்கப்பட்டதொரு பதிலை கண்டு வருந்துகின்றேன். காரணம் நானும் 10ம் வகுப்பு மாணவி தான். பதில் அளித்தவரும் 10ம் வகுப்பு மாணவி தான்.

இளம் மாணவர்கள் இயக்கங்களுடன் தொடர்பு கொண்டிருத்தல் விரும்பத்தக்கதும் வரவேற்கதக்கதுமாகும். கல்வியில் மட்டும் கிணற்றுத் தவளையாக இருந்து விடக் கூடாது. எமது மக்கள் படும்பாட்டை நேரடியாகக் காண்கின்றோம் வருங்காலம் எமது கையில், ஈழத்தை ஆளப்போகிறவர்கள் நாங்கள். எமக்கு கல்வி அவசியம். படித்து பட்டம் பெற்றவர்கள் பலர் தமிழ் இனத்தில் இருக்கின்றார்கள் அவர்களது கல்விக்கு ஏற்ற தொழில்கள் இல்லாததையிட்டு மனவேதனையடைகின்றோம். நாங்கள் படிப்பை வியாபாரமாக கொள்ளாது அறிவு வளர்ச்சிக்காகவும் கற்க வேண்டும்.

"படிக்கின்றோம், தெருவில் நடக்கின்றோம். சுட்டுக்கொல்லப்பட்டு விடுகின்றோம் என எடுத்துக் கொள்ளும் இப்போது உமது படிப்பு எங்கே? பட்டம் வாங்கித் தந்து விட்டதா? வாழ்க்கை பயனுள்ளதாக இருக்க வேண்டும். நாம் எமக்காக ஒரு சிறிய வட்டத்தில் வாழாது, எமது மக்களுக்காக பெரிய வட்டத்தில் வாழ வேண்டும். மாணவர் கல்வியை மட்டும் கற்று முன்னேற்ற பாதையில் செல்ல வேண்டுமானால் எமது இனம் பின்நோக்கிய பாதையில் சென்றுவிடும் எமது தோழர், தோழியரை எடுத்துப் பார்க்கப்போனால் மாணவர்களாகவே அதிகம் பேர் இருக்கின்றனர். கல்விக்கு எல்லையில்லை என்பதனை மறந்து விட்டீர் போலும்.

எமது குறிக்கோள் கல்விகற்று "டாக்டர்" ஆக வேண்டும் என்பது அல்ல. கல்வியும் கற்று சிறந்த போராளியாக வரவேண்டும் என்பதே. எமது பெற்றோரில் சிலருக்கு எமது மண்ணில் பற்று இல்லை. அவர்களின் காணியில் தான் அவர்களுக்கு பற்று. மாண

வர்கள் பலர் இன்று கல்வி கற்கவேண்டும் என்பதை குறிக்கோளாக கொண்டுள்ளனர். இருந்தும் காதல் என்ற பாதையிலும் அவர்கள் செல்கின்றார்கள். இப்படிப்பட்ட பாதையை விட போராட்டம் என்ற பாதை சிறந்தது. எதை எடுத்தாலும் வாழ்விலும் (இல்லறம், காதல் போன்றன) சாவிலும் போராட்டம் ஏற்படுகின்றது. இதனை விட விடுதலைப் போராட்டம் சிறந்தது. ஆறிலும் சாவு நூறிலும் சாவு. நாம் சந்தோஷமாக தானா வாழ்கிறோம்? எமக்கு சுதந்திர நாடாக இலங்கை இருப்பினும் தமிழ் பேசும் எங்களுக்கு சுதந்திரம் கிடைக்கவில்லை. அச்சுதந்திரத்தை போராட்டம் மூலம் கண்டு எமக்காக இல்லாவிட்டாலும் வருங்கால சந்ததியினருக்காக ஆயுதம் தாங்கி சுதந்திரத்தை வென்று எடுப்போம்.

எல்லோரும் வெளிநாடு செல்கின்றார்கள். நாமும் செல்வோம் என்பதை விட எல்லோரும் போராட வேண்டும். எமது நாட்டை விட்டு வெளிநாடு சென்றால் எமது நிலம் பறிபோய் விடும். ஆதலால் இரத்தம் சிந்தியேனும் அவ்விரத்தம் நனைத்த புதிய ஈழத்தை அடைவோம்.

## — வாழும் வரை போராடு —

**விமர்சிக்கப்பட்ட பதிலை மீண்டும் இங்கே பிரசுரிக்கின்றோம்.**

இளம் மாணவர்கள் இயக்கங்களுடன் தொடர்பு கொண்டிருத்தல் விரும்பத்தக்கதன்று அவர்கள் வாழ்க்கையின் முன்னேற்றப் பாதையில் கல்வியை கற்க வேண்டியதொன்றே அவர்களின் குறிக்கோளாக இருக்க வேண்டும். அன்றி இயக்கங்களுடன் தொடர்பு கொள்ளுதலோ அல்லது அவர்களுக்கு மறைமுகமாக உதவி செய்வதோ பெற்றோர்களால் விரும்பத்தக்கதொன்றல்ல. பாடசாலைகளில் கூட்டங்கள் வைப்பது கல்விக்கு உலை வைப்பதாக அமையும் எல்லோரும், பயிற்சி பெறுகின்றாகள் என்று நாமும் பயிற்சி பெறவேண்டும், என்ற எண்ணம் இன்றைய சமுதாயத்தில் வேரூன்றி விட்டது. போராட்டம் என்றால் என்னவென்று அறியாத மாணவர்கள் சிலர் தாம் இயக்கத்தில் சேரவேண்டும். இந்தியா செல்லவேண்டும் தமிழீழம் காணவேண்டும் என்கின்றனர். தமிழீழம் காண்பதில் உள்ள பிரச்சனைகளை அவர்கள் அறிவதில்லை. ஒரு வெடிச்சத்தம் கேட்டாலே பாடசாலை நிறுத்தப்படவேண்டிய நிலையில் நாம் இருப்பதனை உணர்வதில்லை. இனிவரும் காலம் துப்பாக்கி ஏந்தியவர்களுக்கே என எண்ணுகின்றனர்.



இதற்கெல்லாம் மேலாக சுவரொட்டிகளால் நன்மை என்ன. பாடசாலைகளில் நடக்கும் கூட்டங்களில் புத்தகப்படிப்பினால் ஒன்றும் நடக்கப் போவதில்லை எனக் கூறுகின்றனர். புரட்சிப்படிப்பு தான் அவசியம் துப்பாக்கி ஏந்த தயாராகுங்கள் என சிலர் கூறுகின்றனர். சரி, ஈழம் பிடித்து விட்டாலும் ஈழத்தை நடைமுறைப்படுத்த ஒரு படித்தவன் கூட தேவையில்லையா? விடுதலையைப் பற்றிச் சிந்திப்பவர்கள் எதிர்கால கல்வியைப் பற்றி சிந்திக்க மறுக்கின்றார்கள். நான் இவையெல்லாம் அவசியமல்ல என நினைக்கின்றேன்.

## குடும்பத்தின் கல்லறை

இங்கே
குஞ்சுப் பரந்தனில்
ஓர் அபலைக் —
குடும்பத்தின் கல்லறை
மக்கள் போராட்டம் (?)
நடாத்தும் —
மாபெரும் கூட்டத்தால்
உருவாக்கம் பெருகிறது
'ஓ'
எம் மண்ணின் மாணிடமே
மக்கள் போராட்டம்
என —
வரையறைகள் இலக்கணங்கள்
எல்லாம் —
இவர் அகராதினில்
சுயமான உருவாக்கம்
நேற்றைய பொழுதுகளில்
மனட்சாட்சியை தொலைத்து — விட்டு
கருவிகள் ஏந்திய
ஜடங்களாய்
இவர்கள் இப்போது —
உருவாக்கும் கல்லறைகள்
அப்பாவிகளின்
உறைவிடமாய் — இவர்கள்
மக்கள் போராட்ட வரலாற்றின்
இரத்தத்தால் உருவாக்கும்
துயர் நிகழ்வுகளுக்கு
உன் — தீர்ப் பென்ன ?

மண்ணின் மீட்சிக்காக, காரைநகர் கடற்படை முகாம் தாக்குதலின் போது தன்னுயிரை ஈந்தவரும், ஈழப் போராட்ட வரலாற்றில் ஆயுதம் தரித்து களத்திலே இறங்கிய முதல்பெண் போராளியும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சார்ந்தவருமான மதிவதனி (ஷோபா)க்கு "நாங்கள்" தனது வீரவணக்கத்தைச் செலுத்திக் கொள்கின்றது

# சீனநாட்டுப் பெண்கள் விடுதலைப் போராட்டத்தில்......

"முழுமையான புரட்சிகர இயக்கத்தில் பெண்விடுதலை பிரிக்க முடியாத ஒரு அம்சமாக விளங்கி வருகின்றது. உலகெங்குமுள்ள பெண்கள் சமூக வாழ்விலும் மனித இன அபிவிருத்தியிலும் தமது முழுப்பங்களிப்பையும் செலுத்துவதற்காக முதலில் வேறுபாடுகளுக்கும் ஒடுக்குமுறைகளுக்கும் உட்பட்ட நிலையிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள நீண்ட காலம் தளராது போராடி வந்துள்ளனர். சுரண்டலே அடக்குமுறைகளுக்கும், பாகுபாடுகளுக்கும் அடிப்படைக் காரணம் என்பதை அனுபவம் மூலம் அறிந்து கொண்ட சீன நாட்டுப் பெண்கள் தேசிய விடுதலையை சோஷலிஸ அடிப்படையில் வென்றெடுப்பதன் மூலமே உண்மையான விடுதலைக்கு வழியினை ஏற்படுத்திக் கொள்ளலாம் என அறிந்து கொண்டனர்.

## பெண்கள் இயக்கத்தின் ஆரம்பகால கட்டம்

பண்டைய சீன சமூகத்தில் தொழில் புரிந்த பெண்களே மேலதிக அடக்கு முறைக்குள்ளாகினர், ஏகாதிபத்தியம், நிலபிரபுத்துவ அமைப்பு, அதிகார அடக்குமுறை, ஆட்சிமிக்க முதலாளித்துவம் போன்றவற்றால் நசுக்கப்பட்ட சீன நாட்டு மக்கள் அரசியல், குலம், சமயம், ஆண் ஆதிக்கம் என்பவற்றுக்கும் அடிபணிந்து வாழ நேரிட்டது சமூகத்தில் அவர்களுக்கு எவ்விதமான அரசியல் அந்தஸ்த்தும் இருக்கவில்லை குடும்பத்திலும் அவர்கள் ஒதுக்கப்பட்டவர்களாகவே காணப்பட்டனர் ஆண்கள் பெண்களை விட உயர்ந்தவர்கள் என்ற பண்டைய நிலபிரபுத்துவ சமுதாய கோட்பாடுகள் அவர்களை அடிமைகளாக்கி சுதந்திரத்தைப் பறித்திருந்தது.



எனவே சீனத்துப் பெண்கள் பலம் வாய்ந்த புரட்சிகரகோரிக்கைகளை முன் வைக்க வேண்டியவர்களாகக் காணப்பட்டனர் 1919-ம் ஆண்டு மே மாதம் ஏகாதிபத்தியத்திற்கும் நிலபிரபுத்துவ சமுதாயத்திற்குமான போராட்டத்தின்போது, பல முற்போக்கு கருத்துக்களைக் கொண்டிருந்த சில பெண்கள் ஆண்களுடன் சமத்துவம் பெண்ணுரிமை, பெண் விடுதலை பற்றி குரல் எழுப்பினர். அச்சமயத்தில் அவர்களுக்கு தேசிய விடுதலை - வர்க்க விடுதலை - மகளிர் விடுதலை போன்றவற்றிற்கிடையேயான தொடர்பு பற்றிய சிந்தனை தெளிவு இருக்கவில்லை. ஒடுக்கு முறைக்கான அடிப்படைக் காரணம் பற்றியும் அவர்கள் அறிந்திருக்கவில்லை

சிலர் சம உரிமையின்மைக்கு ஆண்களின் ஒடுக்கு முறையே காரணம் என்றெண்ணி அவர்களுக்கு எதிராக போராட்டமொன்றினை நடத்த வேண்டுமென எண்ணினர். வேறு சிலர் தாம் கல்வி பெருமையே ஒடுக்கு முறைக்கு காரணம் என்றெண்ணி பெண்களின் கல்வியை வளர்க்க முயலவேண்டுமென வாதிட்டனர், பெண்களின் உரிமைகளும் அந்தஸ்தும் சமுதாயத்தில் தனியே மகளிர்கள் பிரச்சினைகளாக எண்ணப்பட்டபோது எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. வரலாற்று அனுபவம் இவையாவும் பூர்ஷ்வாக் கருத்தோட்டங்கள் என பாடம் புகட்டியது.

## புரட்சிகர பெண்கள் இயக்கம்:

சீனப் பொதுவுடமைக் கட்சியின் தலைமையினை தலைவர் மாவோ ஏற்றுக் கொண்ட போது சீன பெண்கள் இயக்கம் புதியதொரு பாதையில் செல்ல ஆரம்பிக்கலாயிற்று. 1921 இல் சீனப் பொதுவுடமைக் கட்சி நிறுவப்பட்ட பின்னர் பெண்கள் விடுதலைப் பணிகள் கட்சியினைச் சார்ந்த பெண்களாலும், தொழிற்சாலைகள் பாடசாலைகள், முதலிய நிறுவனங்களிலிருந்த கட்சி உறுப்பினரான பெண்களாலும், கட்சி சார்பற்ற முற்போக்கு சிந்தனையுடைய பெண்களாலும் மேற்கொள்ளப்பட்டன. முதற்படியாக பெண்களை விழிப்படையச் செய்ய அரசியல் கல்வி புகட்டப்பட்டது. தொழிற்சாலை ஊழியர்கள் சம்பள உயர்வுகோரி போரிட்டபோது பெண்களையும் இப்போராட்டங்களில் இணையுமாறு தூண்டப்பட்டனர். பெண்களின் விசேட உரிமைகள் பற்றிய கோரிக்கைகளும் போராட்ட நோக்கங்களும் இணைக்கப்பட்டன. உதாரணமாக தொழிற்சாலை வாயில்களில் பெண்களை உடல் சோதனைக்குட்படுத்துதலுக்கு எதிரான போராட்டத்தைக் குறிப்பிடலாம்.

பொருளாதார போராட்டங்கள் பெரும்பாலும் ஏகாதிபத்தியம், கொமிந்தாங் பிற்போக்குவாத ஆட்சி முதலாளித்துவம் என்பவற்றிற்கு எதிரான அரசியல் போராட்டமாக உருவெடுத்தன. இத்தகைய போராட்டங்களால் ஏகாதிபத்தியமும் தனிப்பட்ட சில குடும்பங்களுமே ஒடுக்கு முறைக்கு காரணம் என்பதனை சீனப் பெண்கள் உணர்ந்து கொண்டனர். "எப்பொழுது நாட்டிலிருக்கும் பெண்கள் அனைவரும் கிளர்ந்தெழுகின்றார்களோ அன்று புரட்சி வெற்றி பெறும்" என்று மாவோ கூறியதற்கிணங்க சீனப்புரட்சியில் பெண்களின் பங்கு காணப்படுகின்றது. 1924-27 லும் 1927 – 37லும் நடைபெற்ற உள்நாட்டுப் போரின் போதும் 1937 - 45 இல் இடம் பெற்ற யப்பானியர் எதிர்ப்புப் போராட்டத்திலும் பெண்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். இவை பெண் விடுதலையின் வெற்றிக்கு பெரும் பங்காற்றின; லட்சக்கணக்கான பெண்கள் ஆண்களுடன் சமமாக நின்று போரிட்டதாலேயே சீனப்புரட்சி வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.

## பெண் விடுதலை பற்றிய இரு கருத்தோட்டங்கள்

கிராமப் புறங்களில் பெண்களைவிட ஆண்கள் மேலானவர்கள் என்ற நிலபிரபுத்துவ கோட்பாடு பலம் பெற்று காணப்பட்டிருந்தது. பெண்கள் ஆண்களின் கட்டுப்பாட்டிற்குள் காணப்பட்டனர். போர் காலங்களில் கூட பல கணவன்கள் தமது மனைவிகளை வீட்டுக்கு வெளியே பணியாற்ற விட மறுத்திருந்தனர். இச்சிக்கலைத் தீர்க்கும் வகையில் ஆணவம் பிடித்த கணவர், குடும்பங்கள் எதிராக நிற்பது அல்லது விவாகரத்து செய்வது என்ற இரு கருத்து அக்காலப் பெண் விடுதலைப் போராளிகளிடம் நிலவியது. ஆனால் வரலாற்று அனுபவம் வேறுவகையில் தெளிவூட்டியது. ஆண் - பெண் இருபாலருக்குமே பொது எதிரி யப்பானிய ஏகாதிபத்தியம் என்பது உணரப்பட்டது. இதனை உணராமை போராட்டத்தினை தோற்கடிப்பதாக அமையும் என உணர்ந்து கொண்டனர். அதாவது ஆண் - பெண் மோதல் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக அமையும் என உணரப்பட்டது இவ்வாறு உணரப்படாதுவிடின் இது பெண் விடுதலை கிடைப்பதற்குப் பதிலாக எதிரானதொரு சூழ்நிலையை தோற்றுவிக்கும் எனவும் அறிந்து கொண்டனர். அதாவது அந்நிய நாட்டின் ஆதிக்கத்திற்குட்படுதல் இரு சாராரையும் அடிமைப்படுத்திவிடுமிடத்து பெண்விடுதலை பற்றிய பேச்சுக்கே இடமில்லாது போய்விடும் என்பதனை அறிந்து கொண்டனர்.

மேலும் விடுதலைபெற்ற சில பகுதிகளில் புரட்சிகர ஆட்சி நிறுவப்பட்டபின்னர் பெண் உரிமையை பெற்றெடுப்பது சம்பந்தமாக இக்கருத்துக்கள் முன் வைக்கப்பட்டது.



1. பெண்களியக்கம் பெண் விடுதலையில் மட்டும் கவனம் செலுத்துவது

2. பெண்ணுரிமைப் போராட்டத்தை வலியுறுத்தினாலும் பெண்களும் இணைந்து ஏகாதிபத்திய – நிலபிரபுத்துவ அமைப்பை முறியடித்து எல்லா பாட்டாளிகளையும் ஒடுக்கும் இவ்வர்க்கத்தினரிடம் இருந்து மீட்டெடுக்க இவர்களை வீழ்த்துவது

இக்கால கட்டத்தில் பெண்விடுதலை என்பது ஓர் ஆய்வு நிலப்போராகவே அமைய முடியும். ஈற்றில் இரண்டாவது கருத்தே சரியானது என்பதனை அனுபவம் மூலமும் கலந்துரையாடல்கள் மூலம் அறிந்து கொண்டனர். மேலும் நிலபிரபுத்துவ அமைப்பு முறை தகர்க்கப்பட்ட பின்னரே பெண்ணுரிமை பெறப்படும் என்ற உண்மை நிரூபிக்கப்பட்டது. புரட்சி மூலம் சீனா விடுதலை பெற்றபோது பெண் உரிமையினைக் காக்கப் பலசட்டங்கள் நிறைவேற்றப்பட்டுப் பல பல பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சீன நாட்டுப் பெண்தொழிலாளர்களின் ஒடுக்குமுறைக்கு காரணமான சமூக, வர்க்க வேறுபாடுகளை சோஷலிச அமைப்பு அகற்றியது. அடிப்படை நிலையில் மாற்றம் உருவானது. அனைத்து துறைகளிலும் சம அந்தஸ்து அளிக்கப்பட்டது. சமவுடமைப் பிரதேசங்களில் பட்டதாரிநிலைக்குட்பட அனைத்து பெண்களும் அப்பிரதேசத்திலேயே வாழ்ந்து ஆண்களுடன் இணைந்து பணிபுரிந்து நாட்டினை அமைத்தனர்; மலைகளை உருமாற்றினர்; ஆறுகளைத் திசை திருப்பினர்; விவசாய விளைவை விஞ்ஞான பூர்வமாக உயர்த்தப் பணிபுரிந்தனர்......... விவசாய நிலத்தில் 30% மான அடிப்படை சீராக்கல் பணிகள் பெண்களால் மேற்கொள்ளப்பட்டு வந்தன அபிவிருத்தி வேலைகளில் பெரும் பங்கினையாற்றி தேசத்தினை வளமாக்கினர்.

இன்று மேலும் பல்வேறு நாடுகளில் காணப்படும். இஸ்ரேலிய சியோனிஸம், அமெரிக்க ஏகாதிபத்தியம் போன்ற சுரண்டலை மையமாகக் கொண்ட அமைப்புகளுக் கெதிராக நடைபெறும் போராட்டங்களில் பெண்களின் பங்களிப்பை வரலாறாக நாம் கண்டுகொண்டுள்ளோம். இந்த வீரமிக்க வரலாற்றிலேயே எமது ஈழப் போரரட்டத்தில் பெண்களின் பங்களிப்பு அவசியமானதும் அத்தியாவசியமுமானதுமாக காணப்படுகின்றது. இங்கு முன்னர் சுட்டிக்காட்டிய மாவோ அவர்களின் கருத்தாகிய "எப்போது நாட்டிலிருக்கும் பெண்கள் அனைவரும் கிளர்ந்தெழுகின்றார்களோ அன்று புரட்சி வெற்றி பெறும்" என்பதனை நினைவுபடுத்த விரும்புகின்றோம்.

சமீபத்தில் குஞ்சப்பரந்தனில் தமிழ்பேசும் குடும்பம் ஒன்று தற்கொலை செய்துகொண்ட நிகழ்ச்சி உங்கள் மனத்தினை விட்டகன்றிருக்காது. இந்த நிகழ்ச்சியினை மையமாகக் கொண்டே போலிகளைத் தேடி, நிலைக்கண்ணாடி என்ற இரு சிறுகதைகளும் எழுதப்பட்டுள்ளது. கற்பனை கலந்த சில உண்மை நிகழ்ச்சிகளை பிணைந்தே இக் கதைகள் எழுதப்பட்டன. இன்றைய சிக்கல் நிறைந்த எமது சமுதாயத்தின் சில வெளிப்பாடுகளை, கதைகளை உருவாக்கியவர்களது கண்ணோட்டம் வேறுபடுத்தியுள்ளது.

# போலிகளைத் தேடி......

குமார் வெளிநாட்டிலிருந்து வந்து இன்னும் மூன்று மாதங்கள் கூட ஆகவில்லை. ஆனால் இந்தச் சிறிய காலத்திற்குள் அவன் ஏதோ பெரும் கடமை வீரனாகவும், தான் ஏதோ ஒரு விடுதலை இயக்கத்தின் முக்கிய உறுப்பினனாகவும் காட்டிக் கொள்ள தவறவேயில்லை. கையில் கைத்துப்பாக்கியுடன், யேம்ஸ் பொன்ட் பாணியில் அணிந்த உடுப்பு இத்தியாதி உருவமாக எந்த நேரமும் சந்தித்திருப்பத்திலுள்ள அந்த மதகின் மேல் அமர்ந்திருப்பான். யாரையாவது கண்டுவிட்டால் போதும் ஏதேதோ எல்லாம் சுற்றி வளைத்துப் பேசி......தன்னைப்பற்றிய பிரலாபங்களையெல்லாம் முடித்து ஈற்றில் 'சமூகத்துரோகிகளை ஒழித்துக் கட்டும் வரை இந்தத்துப்பாக்கிக்கும் எனக்கும் தூக்கமில்லை என்று முடிப்பான்.

குமார். ஏதோ ஒரு இபக்கத்திலிருக்கிறானுக்கும் ஆரோ காட்டிக் குடுக்கிற ஆக்களை இஞ்சினை உலாவுறுங்களாக்கும். அதுதான் இவன் எந்தநேரமும் பிஸ்ரோலும் கையுமாகத் திரியுறான்'. என்று சிலரும், வெளிநாட்டுக்கென்று போய் பயிற்சி முடித்துவிட்டு வந்திருக்கிறானுக்கும் என்று வேறுசிலரும், இயக்கத்திலை இவன் பெரிய பதவிக்குரியவனுக்கும் என்று இன்னொரு பகுதியினருமாக பலவாறு பேச வைத்துவிட்டான் குமார். வெளிநாட்டிற்குச்செல்வதற்குமுன் காறி உமிழ்ந்தவர்கள் கூட இப்போது குமார் என அபார மதிப்பு. ஒரு தனித்துவமான கணிப்பு. ஆனால் குமார்...? அவன் ஊரை ஏய்க்கப் போட்டிருக்கும் இந்த வேடம் வெறும் போலியானதென்பதை அவனைத்தவிர வேறுயாருக்கும் தெரிந்திருக்க நியாயமில்லை.

வட்டக்குளத்தடி வாய்க்கால் என்றால் அந்தப்பகுதி மக்களுக்கெல்லாம் குளிக்குமிடமென்று எல்லோருக்குமே தெரியும். கரிமலைக் கேணியாக அந்த வாய்க்கால் எப்போதும் சனக்கூட்டமாகவே நிறைந்திருக்கும்.



வாய்க்காலின் ஒருபுறம் வீதிக்குக் கிழாகச் சென்று திரும்பி வடக்குப் பக்கமாகச் செல்கிறது. அந்தத் திருப்பத்தின் மேலிருக்கும் மதகின்மேல்தான் குமார் எப்போதும் இருப்பது இப்போதெல்லாம் வழக்கமாகி விட்டது.

இவன் எந்தநேரமும் ஏன் இப்படி துப்பாக்கியோடு இருக்கின்றானோ?...... இது எல்லோர் மனதிலும் எதிரொலிக்கும் கேள்வி.

ஆனால் குமார்.....? அவனின் எண்ணமெல்லாம் சந்திராவின் தோற்றத்திலேயே நிலைகொண்டிருக்கிறது என்பதை யார் அறிவார்?

சந்திரா. இலக்கிய நாயகி ஒருத்தியின் சாயல் அவள். அவளது காதலுக்காக ஏங்கிய பலரில் குமாரும் ஒருவன். ஆனால் சந்திராவுக்கோ இந்தக் காதல் கூதல் என்று எதுவுமே இடையாது. ஏதோ தானுண்டு தன் வேலையுண்டு என்று அவள் நாட்களை ஓட்டிக்கொண்டிருந்தாள். வட்டக்குளத்தடி வாய்க்காலுக்குச் சந்திரா குளிக்கவந்துவிட்டால் போதும். குமார் எப்படியும் அங்கே பல்லிளித்தபடி நின்றிருப்பான்.

குமார் சந்திராவிடம் தன் காதலை யாசித்தான்.

சந்திராவோ "உழைக்கத் தெரியாத சோம்பேறியளுக்கெல்லாம் காதல் ஒன்றுதான் குறைச்சலோ காலிலை கிடக்கிறது தான் கன்னத்துக்கு வரும்" என்று ஒருநாள் குமார் மறித்துக் கதைக்க முற்பட்டபோது, செருப்பைக் காட்டிவிட்டுச் சென்று விட்டாள்.

பலருக்குமுன் இப்படி இவள் சொல்லிவிட்டாளே என்ற ஆதங்கம், பழிக்குப்பழி வாங்கும் எண்ணத்தை குமாரின் உள்ளத்தில் மூட்டிவிட்டது.

வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்த குமார் இப்போது தன் பழைய பல்லவியை புதிய ராகத்தில் பாட ஆரம்பித்து விட்டான்.

குமாரின் இந்தப் புதிய பாடலைப் புரிந்துகொண்ட சந்திரா வட்டக்குளத்தடி வாய்க்காலுக்கு முழுக்குப் போட்டுவிட்டாள்.

சந்திரா வருவாள் வருவாள் என்று காத்திருந்த குமார் ஏமாற்றத்தைத்தான் தழுவிக் கொண்டான்.

சந்திரா குமாரின் இயக்கப் போர்வையையும் தீய குணங்களையும் தோழி ஒருத்தியின் துணையோடு விடுதலை இயக்கப் பிரதிநிதி ஒருவனிடம் தெரியப்படுத்தினாள். நல்ல முடிவொன்று வருமென்று சந்திரா காத்துக் கிடந்தாள்.

குமார்......... போதை ஏறிய நிலையில் சந்திராவின் வீட்டுப் பக்கம் தலைநீட்டத் தொடங்கிவிட்டான். வார்த்தை ஜாலங்களாலும் துப்பாக்கியாலும் அவளைக் கெடுத்துவிடப் பெரும் பிரயத்தனம் செய்தான்.

சந்திராவின் அண்ணன் சிவராமன் மட்டும் இல்லையென்றால்ம்... அவனை எங்காவது கடத்தி விட்டால் துப்பாக்கியோடு சந்திராவின் வீட்டிற்குள் புகுந்தான் குமார். இரவுவேளை இயக்கத்தின் பெயரைச் சொல்லிப்புகுந்த குமாரோடு கூடவே வேறு சிலரும் இருந்தனர். சிவராமனை விசாரணைக்காக அழைத்துச் செல்வதாகவும் விசாரணை முடிந்ததும் கொண்டுவந்து விடுவதாகவும் சொல்லி அழைத்துப்போனான் குமார்.

சந்திரா குமாரின் போலிவேடத்தைத் தெரிந்திருந்தும் உண்மையான இயக்கப்பிரதிநிதிகள் வரும்வரை எதையுமே பேசமுடியாதென்பதாலோ என்னவோ பேசாதிருந்துவிட்டாள்.

மாலையில் அழைத்துச் சென்ற சிவராமன் மறுநாள் மாலையாகியும் இன்னமும் வீடுவந்து சேரவேயில்லை. சந்திராவால் இப்போது வீட்டில் இருக்கவே முடியவில்லை. ஏதோ ஒரு சாட்டைச் சொல்லித்தாயின் சம்மதத்தோடு தோழி பிரியாவிடம் ஓடினாள். சந்திரா நிலவின் எறிப்புக்கூட அவளுக்கு பங்குனி வெயிலாகச் சுட்டெரித்தது. பிரியாவிடம் எல்லாவற்றையும் கூறிவிட்டு அவள் ஓட்டமும் நடையுமாகத் தன்வீடு திரும்பினாள்.

வீட்டில் எரிந்து கொண்டிருந்த விளக்கு அணைந்து விட்டது. வேட்டை நாய் போல அவள் அவதானித்தாள். வீடு தேங்கிய இருளில் எதுவுமே புரியவில்லை... அம்மா... அம்மா... அப்பா...

எவரது குரலும் பதிலுக்கில்லை......

ஓசைப்படாமல் உள்ளே செல்வோமா? ஒருகணம் அவள் சிந்தனை இப்படித்தான் தோன்றியது. மறுகணம்... மறுகணம் ஓ... இதென்ன சத்தம்... முனகல் சத்தமொன்று வெளிவராமல் அமுங்கிக் கொண்டிருக்கிறது...



ஐயோ... ஐயோ... சந்திரா குரல் வைத்தாள். தூரத்தே இருந்த செல்லப்பர் டோச் லைற்றோடு தாவிக்குதித்துவர அவரைத் தொடர்ந்து வேறு சிலரும் வந்து சேர்ந்தனர்.

டோர்ச் வெளிச்சத்தில் உள்ளே சென்ற சந்திரா விளக்கில் ஒளி ஊட்டினாள். மறுகணம்... ஓ...அம்மா... அப்படியே அவள் வீழ்ந்து போனாள்.

செல்லப்பரும் கூட வந்தவர்களும் உள்ளே சென்றனர். ஏன் பிள்ளை ஏனடி அளுகிறாய் என்றவாறு உள்ளே சென்றவரின் கண்கள் பிரமித்து விட்டன.

சந்திராவின் குடும்பத்தில் ஒருவரும் பாக்கி இன்றி எல்லோரும் கட்டப்பட்ட நிலையில் கிடந்தனர். வாயில் சீலை திணிக்கப்பட்டு கிடந்த அத்தனை பேரின் உடல்களிலும் இரத்தம் வேறு கசிந்தும் கொண்டிருந்தது.

சந்திராவின் அம்மா முக்கிமுனகி ஏதேதோ சொன்னாள். ஆனால் சண்முகம்... சந்திராவின் அப்பா சண்முகத்தால் எதையுமே சொல்லமுடியவில்லை. அந்த அளவிற்கு மோசமாகத்தாக்கப்பட்டு விட்டார்.

''என்னைக் கெடுக்கத்திட்டமிட்டுத்தான் இந்தளவிற்கு எல்லாம் நடத்தி இருக்கிறான் குமார்... ஆனால்...'' வார்த்தைகள் சந்திராவின மனதோடு சங்கமமாகி நின்று விடவே அவள் எங்கோ பார்த்தவாறு நெடுமூச்சு விட்டுக் கொண்டாள்.

''ஆ... இயக்கங்களின்ரை சின்னத்தனங்கள்'' யாரோ ஒருவன் இப்படிக் குரல் வைத்தான் ஆவேசமாக.

இது மட்டுமே அவை இன்னும் செய்வினம் இதுக்கு மேலேயும் செய்வினம் என்றால் இன்னொருவன் செல்லப்பர் மட்டும் எதுவுமே பேசாமல் ஏதோ யோசனையில் ஆழ்ந்தார்.

பொழுது விடிவதற்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கிய போது தான் எல்லோரும் அங்கிருந்து திரும்பியிருந்தனர்.

எல்லோரும் போனதும் சிவராமனைத் தூக்கிவந்து முற்றத்தில் போட்டுவிட்டு ஓடினர்சிலர். சிவராமனின் தலையிலும் முகத்திலும் ரத்தத்தின் கறைகள் காய்ந்து கிடந்தன.

தாய் அழமுடியாமல் அழுதாள் மகளைப்பார்த்து, சந்திரா அழவே இல்லை அவள் இதுவரை எதிர்பார்த்த இயக்கமீட்பர்களை இன்னமும் காணவே இல்லை. அவர்கள் வரமாட்டார்களோ?

சந்திரா தடுமாறினள். "இப்படிச்சின்னத்தனமாக உயிர் வாழ்வதிலும் சாவது மேல்" தனக்குத்தான் கூறிக் கொண்டு எதையோ தேடினாள்.

ஊர்ச்சனங்கள் விடிந்ததும் விடுப்புப்பார்க்க வரப்போகுதுகள் அப்பிடி இப்பிடி... எத்தினை கதையள் இனி... இத்தனையும் கேட்டு வாழ்வதிலும்... அது தான் சரி... சந்திரா முடிவெடுத்துக் கொண்டாள்.

காலைத்தேனீர் எல்லோருக்கும் இன்று நேரத்தோடு கிடைத்தது அந்தோ... கொடுமை. சந்திரா கிருமி நாசினியைக் கலந்து எல்லோருக்கும் கொடுத்துத்தானும் பருகினள் அந்த அவசர முடிவைத் தவிர அவளால் வேறு எந்த முடிவையுமே எடுத்துக் கொள்ள முடியவில்லைப் போலும்.

வெறும் உணர்ச்சிகளால் எதுவுமே ஆகிவிடுவதில்லை என்பது சந்திராவின் இந்த அவசர முடிவால் புலப்படுவதையே யாருமே புரிந்து கொள்ளவா பேசிறுர்கள்...?

போலிசுளின் கொடுமைகளிலிருந்து ஒரு குடும்பத்தின் விடுதலைக்காக விரைந்து கொண்டிருந்த உண்மை இயக்கத்தின் பிரதிநிதிகள் புலர்ந்தும் புலராத வேளையிலிருந்து பொழுதின் விடிவிஞேடு சந்திராவின் வீட்டை அடைந்து விட்டனர்.

போலிகளின் பொய்மைகள் அரங்கேறி விட்ட அந்தக் கொடுமையில் அயலவர்கள் கூடி அழுது கொண்டிருந்தனர். நெஞ்சில் தியாக வடுக்களையே சுமையாகத்தாங்கிக் கொண்டிருக்கும் அந்தத் தியாகிகளின் விழிகள் எல்லோருடனும் சேர்ந்து கண்ணீர்த்துளிகளைச் சிந்தின.

ஆனுல் அந்தப்போலிகள்......?

ஆம்... இந்த நிலைக்கு ஒரு குடும்பத்தை அழித்து விட்ட அந்தச் சமூகவிரோத போலிக்கும்பலைத்தேடி உண்மை இயக்கப் பிரதிநிதிகள் சென்றுகொண்டிருப்பதை யாரும் புரிந்து கொள்ளவே இல்லை.

## "நிலைக் கண்ணுடி"— (சிறுகதை)

"என்னடாப்பா மணி, நேரம் ஆறேகாலாச்சு. இப்பதான் களைத்து விழுந்து வாருய்போலயிருக்கு. இவ்வளவு நேரமும் அங்கே வேலை செய்தனியா" என்று கேட்ட நண்பன் முரளியின் முகத்தை எரிச்சலுடன் பார்த்தமணி, "பொறு என்ரை கோபத்தைக் கிளப்பாதை, அங்கே எல்லோரும் போனப்பிறகு நான்தான் மிச்ச அலுவல் எல்லாம் பார்த்து வரவேண்டியிருக்கு. வேண்டுறது கிளார்க்கின்ட சம்பளம். ஆனுல் வேலையெல்லாம் என்ரை தலையிலை. அது போகட்டுமடா, றேடியோவிலை ஆறு மணிக்கு நியூஸ் கேட்டனியா, என்ன சொல்லுருங்கள்?" "என்னத்தையடா சொல்லப்போருங்கள். உண்மையென்ருல் என்ன என்று தெரியாதவங்களுக்கு நியூஸ் ஒரு கேடுதான் போ. இதைவிடு, நான் இப்ப வரக்கை ஒரு நியூஸ் அறிஞ்சனுன். எங்கடை பொடியள் கனைக்கபேர் அங்காலை போட்டாங்களாம். பயிற்சியெல்லாம் குடுக்கிருங்களாம். உண்மையிலை நாங்கள் உயிரோடை இருக்கிறதிலை ஒரு அர்த்தம் வேணும். ஒன்று நாட்டுக்குழைக்கோணும், அல்லது வீட்டுக்குழைக்கோணும். நீயாவது ஒரு வேலை கிடைச்சு நிம்மதியாயிருக்கிருய். ஆனுல் நான் ஒன்றுக்குமுதவாமல் திரியிறன். வீட்டிலும் கஸ்டமாயிருக்கு. என்ன செய்வதென்று புரியேலை" என்ற நண்பனை இடைமறித்த மணி, "என்னடா பெரிய நிம்மதி, எனக்கு இந்த சராசரி வாழ்க்கையை ஏனே பிடிக்கவில்லை. கெதியிலை இதுக்கு ஒரு முடிவு காணவேணும்" என்ருன். "என்ன சொல்லுருய், இயக்கத்தில் சேரப்போறியா, உன்னை நம்பித்தான்டா அப்பு, தங்கச்சியவையள் இருக்கினம். போதாக்குறைக்கு உன்ரை மச்சாள்கூட உனக்காகத்தானே காத்திருக்கிருள் நீ இதையெல்லாம் விட்டுட்டு..... வேண்டாம் ஆறுதலாக யோசித்துப்பார். இந்த கிளார்க் வேலையைக்கூட உன்ரை அம்மா எவ்வளவு பேரைக் கெஞ்சி எவ்வளவு காசு குடுத்து எடுத்திருப்பா. அவவை ஏமாத்திப்போடாதை மச்சான்." "இல்லை முரளி இயக்கத்தில் சேர்றதாலை என்ரை குடும்பத்தை ஏமாத்துகிறேனு. எத்தனையோ நண்டர்கள் இன்று சேர்ந்து கஷ்டப்படுவதெல்லாம் யாருக்கடா. எங்கடை நாட்டுக்கு, அதுவே ஒரு குடும்பம்தானே. நீ ஏன் எனது குடும்பம் என்று வேறுபடுத்திருய், தமிழ்ச்சமுதாயத்தைப் பார், எவ்வளவு கஷ்டப்பட்டு, நசுக்கப்பட்டு, மானபங்கப்படுத்தப்பட்டு வாழ்கிறுர்கள். இவையெல்லாவற்றையும் கண்ணுல் பார்த்தபிறகும், மடிச்ச உடுப்புபோட்டு, காலுக்குமேல் கால் போட்டு, சம்பளம் வாங்குவதில் அர்த்தமில்லை. விரைவில் எமக்கு விடுதலை கிடைக்க வேணும், சரி நீ போட்டுவா. நான் வாறன்.

யோசித்தவாறே வீட்டுக்குள் நுழைந்த மணியைத் தடுத்து நிறுத்தியது அவனது தம்பியின் குரல், ""அண்ணா, உனக்குத் தெரியுமெல்லே. எங்கடை விதானையார் அமிர்தலிங்கத்தை பொடியங்கள் சுட்டுட்டாங்களாம். அவரில் ஏழோ, எட்டு குற்றங்களையும் சுமத்தியிருக்கிறாங்கள். ஆனால் எல்லாம் உண்மையோ என்றுதான் தெரியேலை. பாவம் அண்ணா. அவரை சாக்காட்டியிருக்கக்கூடாது. திருந்துறதுக்கு ஒரு சந்தர்ப்பம் குடுத்திருக்கலாம். ""இல்லை தம்பி, அப்படிக் குடுத்தால், மற்றத்துரோகிகளும் தொடர்ந்து குற்றம் செய்யத் தொடங்கிடுவார்கள். இவர்களை விடக்கூடாது. இப்படியான தண்டனைதான் கொடுக்கவேணும். அப்பதான் மற்றவர்களுக்கும் பாடமாயிருக்கும். ஏன் எங்கள் வீட்டில்கூட யாரும் சமூகத்துரோகச் செயல்களில் ஈடுபட்டால் இப்படியான தண்டனையைத்தான் நான் கொடுப்பேன்."" என்று கூறியவாறே படுக்கையில் சாய்ந்தவனின் மனதிதல் பலவிதமான சிந்தனைகள்...... இந்த சமூகம் திருந்தினால்தான் நாட்டு விடுதலை தானாக வரும். ஒவ்வொருவரும் நாட்டு விடுதலைக்குழைக்கவேணும். ஏன், என்னையே எடுத்துக்கொண்டால், சமுதாயத்தின் கண்ணுக்கு நான் ஒரு உத்தியோகத்தன். ஆனால் என்ரை மனம் யாருக்குப் புரியப்போகுது.'' அலுவலகத்திலை நான் ஒரு இடைநிலை ஊழியன். எனது குடும்பத்துக்கு இந்தச் சம்பளம் போதாது. இப்படியே தொடர்ந்து வாழ்க்கை முழுக்க கிளார்க்காக இருந்து காணப்போவதுதான் என்ன! பொடியனோடை சேர்ந்தாலும் போராட்டத்தில் ஈடுபடலாம். நான் இல்லாவிட்டால் குடும்பம் என்ன நடக்காமலா போகப்போகிறது. தம்பியவங்கள் இருக்கிறாங்கள்தானே. நான் போகப்போவதால் சில நாட்களோ, சில மாதங்களோ வீட்டில் கவலைப்படுவார்கள். பிறகு போகப்போக பழகிவிடும். இப்பவெல்லாம் எத்தனை பொடியள் இயக்கத்தில் சேர்ந்திட்டாங்கள். அவர்களின் குடும்பமெல்லாம் வாழவில்லையா? எனவே நான் வீட்டைவிட்டு, அவர்களுடன் சேருவதுதான் நல்ல வழி. எனக்கும் பந்தபாசம் உண்டுதான். அதற்காக குடும்பத்தோடே இருக்கவேணும் என்பதில் அர்த்தமில்லை.'' இவ்வாறாக சிந்தனைக் குழப்பம் ஒரு தெளிவுக்கு வந்தபோது, தாயின் அழுகுரல் அக்கம்பக்கத்தாரை தட்டியெழுப்பியது.

மணியின் மாமனார், தனது மகளின் வாழ்க்கையையெண்ணி கண்ணீர் சிந்தினார். மகளோ, மணிகூடவா இயக்கத்தில் சேர்ந்துவிட்டார். எனக்குக்கூடச் சொல்லாமல் போகும் அளவிற்கு தீவிரத்தை யார் கொடுத்திருப்பார்கள் என எண்ணி எண்ணியே உருகிய மனம், நாளடைவில் அவனை மறக்கத் தலைப்பட்டது. இயக்



கத்தில் சேர்ந்தால் அவர்களுக்கு காதலி இருக்கக்கூடாது என்று சொல்கிறார்களே, அப்படியாயின் அவரும் என்னை மறந்திருப்பார். அவர் மீண்டும் வந்தால், என்னைப் பார்க்க வருவாரா எனப் பலவாறாக எண்ணமிடும் சராசரிப் பெண்களின் உள்ளம்போல் தத்தளித்தது அவள் மனம். இவ்வாறு மணியை தாய், சகோதரத்துடன், மச்சாளும் சோர்ந்து மறக்க முயன்றனர்.

பல மாதங்கள் கவலையில் ஆழ்ந்திருந்தவர்களுக்கு அன்று வந்த மோட்டார் சைக்கிளின் சத்தம் மணியின் வருகையை மகிழ்ச்சியுடன் அறிவித்தது. ஆமாம் மணி பயிற்சி முடிந்து வந்துவிட்டான். அயலவர், உற்றார், உறவினருக்கு அன்று காட்சிப்பொருளாக இருந்த மணியின் மனதில் பல நினைவுகள். எனக்கு இப்ப இவ்வளவு மரியாதையா? அந்த நாட்களில் நான் ஒரு கிளார்க் என இழிவாக நினைத்தவர்கள் கூட 'இயக்கம்' என்ற சொல்லுக்கு இவ்வளவு மதிப்புக்குடுக்கிறார்கள். ம்... இதுதான் உலகம். ஒன்றைக் கண்டு இகழ்வதும், பின் அதைப் போற்றுவதும், அப்பப்பா எமது மக்களின் எண்ணங்களைப் புரியமுடியவில்லையே எனத் தனக்குள் சிரித்துக்கொண்டான். தாயின் மகிழ்ச்சியைக் கண்டு மணி மகிழ்ந்தாலும், அந்தப் பாசத்தைப் புலப்படுத்தும் உள்ளத்தின் உணர்வை அவனால் வெளிக்காட்ட முடியாது. அவன் பாச உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு நிற்கும் கட்டுப்பாட்டை உணர்ந்துவிட்டான். சராசரி மனிதனின் வாழ்க்கையினின்றும் வேறுபட்டு, வாய்மூலம் கதைப்பதைத் தவிர்த்து, செயலில் வெளிக்காட்டும் உணர்வு அவனுக்குள் உருவாகிவிட்டது.

இது நாள்வரை கவலையாக இருந்தாலும், இராணுவத்தின் தொல்லையின்றி நிம்மதியாக இருந்த குடும்பத்தினரை மணியினது வருகை மேலும் கவலைப்படத்தான் வைத்தது. தாயின் மனமோ, தினமும் மகனை எண்ணி துயரத்திலாழ்ந்தது. அந்த வட்டாரத்திற்குள் மகன் நண்பர்களுடன் வாகனங்களில் திரிவதும், மற்றய கிராமங்களுக்குச் சென்று துரோகி எனச் சந்தேகிப்பவர்களை எச்சரிப்பதும், தண்டனை வழங்குவதும் அவர்களுக்குப்பல இன்னல்களை மாத்திரமன்றி, எதிர்ப்புக்களையும் உருவாக்கலாயிற்று. அது மாத்திரமன்றி, அடுத்த மகனின் சில நடவடிக்கைகளும் அவளை மேலும் கவலை கொள்ளச் செய்தது. பலர் அவனைப்பற்றிச் சொல்லும் செய்திகளும் அவளுக்கு அத்தனை மகிழ்ச்சியைத் தரவில்லை.

சில நாட்களின்பின் வீட்டுவாசலில் வந்து நின்ற வாகனத்தில் ஆயுதங்கள் சகிதம் வந்திறங்கிய மகனையும் சகாக்களையும்

கண்ட தாய் ஒருகணம் திடுக்கிட்டாள். ''ஏன் ராசா, இப்படித் திரியிறியள். யாராவது சொல்லிக் கொடுக்கப்போறாங்கள். போதாக்குறைக்கு ..... அவனை இடைமறித்த மணி, ''தம்பி எங்கே போய்விட்டான். அவனை இன்றைக்கு கொஞ்சம் கடுமையாக விசாரிக்கவேணும்'' என்றான். அப்போதுதான் அங்குவந்த தம்பியைப் பிடித்து வானில் ஏற்றிய மணி, அம்மா உனது மகன் செய்த வேலை என்ன தெரியுமா, ஊரிலுள்ள கூட்டுறவுக் கடைகள், நகைக்கடைகள் எல்லாவற்றிலும் நண்பர்களுடன் சேர்ந்து கொள்ளையடித்தது மாத்திரமன்றி, இவற்றைவிடப் பாரதூரமான பல செயல்களிலும் சம்பந்தப்பட்டிருக்கிறான். நாட்டு விடுதலைக்காகப் போராட வெளிக்கிட்டிருக்கும் என்ரை குடும்பத்திலை இப்படியொரு களங்கம் ஏற்பட நான் அனுமதியளிக்க முடியாது. எவ்வளவு தரம் இவர்களை எச்சரித்திருந்தும், அவற்றைப் பொருட்படுத்தாது செய்திருக்கும் செயல்களை நான் மன்னிக்க முற்பட்டாலும், எனது நண்பர்கள் தயாராகவில்லை. இதற்கு வேண்டிய தண்டனை மேலிடத்திலேயே தீர்மானிக்கப்படும். நீ இவனை மறந்துவிடு. நாங்கள் வருகிறோம்.

தாய், சகோதரங்களின் கதறலின் மத்தியில் தன் மகன் இளைஞர்களால் கொண்டுசெல்லப்பட்டதைக் கண்ட ஊரார் பலவிதமான கருத்துக்களையும் கூறி அவர்களை மேலும் துன்பப்படுத்தினார்கள். ''தம்பி என்ற பாசமிருந்திருந்தால் இப்படிச் செய்திருப்பானா'', ',தான் தான் வீட்டுக்கு உதவாமல் போய்விட்டன், தம்பியாவது சகோதரிகளைப் பார்க்கட்டும் என்றுகூட இரக்கமில்லாமல் போய்விட்டதே'' என்று பலவாறும் கதைக்கலானார்கள். ஒரு சிலர், ''அவனுக்கு தண்டனை கொடுக்கவேணும். எவ்வளவு மக்களை வருத்தி, அந்தக் கொள்ளைகளை நடத்தியுள்ளார்கள். கடவுள்தான் அண்ணன் வடிவில தண்டனை கொடுக்க முற்பட்டிருக்கிறார். மணிதான் உண்மையான போராளி அவனைப்போல சிலர் இருந்தால்தான் சமூகம் திருந்தும்'' எனவும் பல்வேறு வகையாகப் பேசும் சனங்களைக் கண்ட தாயும், சகோதரர்களும் பெருங்குரலெடுத்து அழுது அலற்றினார்கள். மணி செய்தது சரியா, தவறா எனப் புரியாத நிலையில் தாயின் மனதில் தாங்கள் வாழ்வதின் அர்த்தம் என்ன, இவ்வாறு மானமிழந்து தொடர்ந்தும் வாழத்தான் வேண்டுமா? இதுவரை நான் பட்ட கஷ்டங்களுக்கு விடிவு கிடைக்குமென்றிருக்க இப்படியாகி விட்டதே. நானும், பிள்ளைகளும் வாழத்தான் வேண்டுமா எனப் பெரிய போராட்டமே நிகழ்ந்தது.

தாய், சகோதரர்களுக்கு உண்மையை விளக்கவைக்க, வீட்டிற்கு வந்த மணியால், அவர்களின் உயிரற்ற உடல்களைத்தான்



ணமுடிந்தது. இதை எதிர் பார்க்காதவன் ஆழ்ந்த சோகத்தால் நிலைகுலைந்து போனான். நான் செய்த காரியம் எனது குடும்பத்தை இந்தளவுக்குப் பாதித்திருக்கிறதே என்பதைக் கண்டவன், கடவுளே நான் பட்ட கஷ்டமெல்லாம் யாருக்காக, நமது நாடு விடுதலை பெற்று, நமது மக்கள் சுதந்திரமாகத் தமது உரிமைகளைப் பெற்று வாழவேனும், ஒவ்வொரு குடும்பமும் நிம்மதியாக சந்தோஷமாக இருக்கவேணும், என்பதற்காகவே, எனது வாழ்க்கையின் இன்பங்களைத் துறந்து இப்படி ஒரு வழியைத்தேடிக் கொள்ள, குடும்பமே வேரோடு அழிந்து விட்டது. இது எவ்வாறு சாத்தியமானது? சமுதாயத்தில் மாற்றம் வந்தால்தான் எமது எண்ணத்தை நிறைவேற்ற முடியும். சமுதாயம் திருந்தும் வரை நம்மைப் போன்ற இளைஞர்களால் அதனை மாற்றமுடியாது என்பது தெளிவாகிய நிலையில் நிதர்சனமற்ற பார்வையை உலகினை நோக்கிச் செலுத்தினான்.

''நாட்டு விடுதலைக்காகத் தம்மை அர்ப்பணித்த மணியைப் போன்ற இளைஞர்கள், இறுதியில் தமது குடும்பத்தை இழந்து நிற்கும் பரிதாப நிலைக்கு முடிவு கிடையாதா''

---

## 'நாங்களும் - நீங்களும்'

இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் தீர்க்கமானதொரு விடுதலைப் பாதைக்கான வழியினை, கொள்கைகளை கருத்துக்களை அறிந்து தெரிவு செய்யவேண்டிய நிலைக்கு மாணவர்களாகிய ''நாங்கள்'' தள்ளப்பட்டுள்ளோம். இந்த அடிப்படையிலேயே மாணவர் இளைஞர் பொதுமன்றம் மாணவர்கள், இளைஞர்கள் மத்தியில் இயங்கி வருவதுடன் எமது சிந்தனை, கற்பனை, அரசியல் வெளிப்பாடு போன்ற பல்வேறுபட்ட அம்சங்களை வளர்த்துக்கொள்ள முயன்று வருகின்றது. பணத்துக்கு விலைபோகும் சுயவர்கள், நாட்டை விட்டோடும் வெற்று வேட்டுக்கள், பிரச்சனைகளை விளங்க மறுக்கும் சோம்பேறிகளின் மத்தியில் நீங்கள் எவ்வாறு ஈழத்தை வென்றெடுக்கப் போகின்றீர்கள் என்ற கேள்வி ஒரு புறமும், அடக்குமுறைக்காக போலி வேடமிட்டுள்ள சுரண்டலை மையப்படுத்தியவர்கள் ஒரு புறமும்; இவர்கள் அனைவரையும் ஒருங்கே வீழ்த்தி அமைக்க முனையும் ஈழம் எவ்வாறு அமைய வேண்டும் என ''நீங்களும் நாங்களும்'' ஒரு புறமும் நின்று போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய நிலையில் உள்ளோம்.


எனவே சிந்தனை தெளிவினை மீட்டுவது இன்றைய அத்தியா வசிய தேவையாக காணப்படுகின்றது. பெரும்பாலும் ''நாளைய தலைவர்களான' உங்களின் ஆக்கத்திலேயே 'நாங்கள்' கருக்கொண்டு உருப்பெற்று வருகின்றது. சரியான வழியினை அமைத்துக்கொள்ள உங்கள் ஆக்கங்களை 'நாங்கள்' வரவேற்கின்றது.

- கருத்துக்கள் தர்க்கீக ரீதியாக அமைவது வாழ்க்கை யோட்டத்திற்கு பொருத்தமானது.
- வெளிப்பாடுகள் புதிய அம்சங்களை கூறட்டும்.
- ஈழவிடுதலை, போராட்டம், போராளி, இயக்கம், சோஷ லிச அரசு பற்றிய உங்கள் எண்ணங்களை சித்திரங்களாக வெளிப்படுத்துங்கள்.
- நசுக்கப்படும் மக்களுக்கு உங்கள் கருத்துக்கள் வழியினைச் சமைக்கட்டும்.
- உங்கள் பாடசாலையிலோ அன்றி அயலவர்களிலோ முற் போக்குச் சிந்தனையுடையவர்களுடன் பகைமையற்ற முறையில் கலந்துரையாடுங்கள்- சிந்தனையை தெளிவுபடுத் துங்கள்- கருத்துக்களை வெளிப்படுத்துங்கள்.

ஆக்கங்களை ''நாங்கள்'' வந்த வழியிலோ அல்லது நண்பர்கள் மூலமோ அறிந்தவர்கள் மூலமோ கிடைக்கச் செய்யுங்கள்.

---

எழுச்சி மிக்க ஈழவிடுதலைப் போராட்டம் ''யுத்த நிறுத்தம்'' மூலம் மழுங்கடிக்கப்பட்டதனை சகிக்க முடியாத மாணவர்களின் எதிர்ப்புப் போராட்டம் (2-7-85)



மாணவர்கள் புகையிரதத்தை மறித்தல்



ஊர்வலத்தில் மாணவிகள்